Q7:3
M98°
115127

57 / 1202
3.1899

பிஸ்மில்லாஹிர்றஹ்மானிர்றஹீம்.

# ஈமானுண்மை

# இசுலாநன்மை

என்னும்,

# உக்கீதத்துல் இஸ்லாம்.

இஃது
திருநெல்வேலிப்பேட்டை வடக்குத்தெரு
மகாகனம்பொருந்திய மவுலானாமவுலவி
செ. செய்கு அப்துல்காதிர் ஆலிம்சாகிபு
அவர்களாலியற்றப்பட்டு,

—()*()—

பெட்டூர்மேலத்தெரு
அ. இ. செய்யிதுராவுத்தர் அவர்கள்
முயற்சியால் 1202

சென்னை-இட்டா
பார்த்தசாரதிநாயுடு
அவர்களாற் றமது
நிரஞ்சனவிலாச அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பட்டது.

72

திருத்தமான முதற்பதிப்பு

காப்பி 1000

இதற்குக் கவர்ன்மெண்டு ரிஜிஸ்டர் செய்யப்பட்டது.
Registered Copy Right.

O7;3
M98

# அறிவிப்பு.

இந்த (ஈமானுண்மை இசுலாகன்னை) என்னு ஹக்கீகத்துல் இசுலாமென்ற, புத்தகத்தை மேற்கூறிய மவுலவி செ. செய்து அப்துல்காதிர் ஆலிம்சாகிபு அவர்கள் அனுமதியன்றி அச்சிடப்படாது அச்சிட்டால் சர்க்கார் மூலமாய்த் தண்டிக்கப்படுவார்கள்.

இந்தப் புத்தகம் வேண்டியவர்கள் திருநெல்வேலிப்பேட்டை வடக்குத்தெரு மகுதூமி மதரசாவிலும் சென்னபட்டணம் ஸ்ரீ பத்மநாபவிலாச அச்சுக்கூடத்திலும் ரொக்கவிலைக்கும்போஸ்டாபீசில் பணஞ்செலுத்திப் பெற்றுக்கொள்கிற (வால்யூபீ பேப்பர்)மூலமாயும் முன்பணமனுப்பி போஸ்டுமூலமாயும் விலைசரசமாய்ப்பெற்றுக் கொள்ளலாம்.

(இன்னும்) மேற்படி மதரசாவில் நேர்வழிவிளக்கம் தீன்மணி முழக்கம் ஆயிதீனறப்பதம் ஆயிபீனற்புதம் என்ற புத்தகங்களும் விலைசரசமாய்ப் பெற்றுக்கொள்ளலாம் மேல்விலாசம் மேலே சொல்லியதே.

(அருக்காமுல் இசுலாம்) என்ற நூதனமான புத்தகமொன்று தயாராகி வருகின்றது ஈமான் இசுலாமின் ருக்குமுகள் மசாயில்கள் வரும் அதனை இன்சா அல்லாகுத்தஆலா சமீபத்தில் அச்சிட்டுப் பிரகாரஞ் செய்வாம்.

இங்ஙனம்

க. இ. செய்யிதுராவுத்தர்.

சமாதுன்மை இகலாநன்மை என்னும்

ரெக்கீகத்துல் இசுலாமின்

# விஷய அட்டவணை.


| பக்கம். | விஷயம். |
| --- | --- |
| க. | அல்லா தஆலாவின் துதி, நபிநாயகத்தின் சலவாத்து. |
| ,, | கிதாபின் வைலாது. |
| ௩. | மனுக்களின் ஆதிமார்க்கவிளக்கம். |
| ௪. | மனுக்கள் இவ்வுலகில் பிரசவிக்குமுன் அருவாளுடைய ஆலத்தில் ஒரே கூட்டமாக இருந்த விபரம். |
| ௬. | இஸ்லாமார்க்க விசுவாசிகள் அவிசுவாசிகள் இம்மாத்திரமென்கிற விபரம். |
| ௰. | மனுக்களின் பலவிதமான மார்க்கங்களின் விபரம். |
| ௰௬. | முதலாவது எகூதிய்யாவின் விபரம். |
| ௨௰. | யூதர்களின் பிரிவு. |
| ௨௪. | உ-வது, நசுரானிய்யாவின் விபரம். |
| ௩௬. | கிறிஸ்தவர்களின் பிரிவு எஉ. |
| ௩௭. | கிறிஸ்தவரை மூன்றுபிரிவாக்கின பூலிசின் சரித்திரம். |
| ௪௪. | ௩-வது, சாபியிய்யாவின் விபரம். |
| ௪௫. | ௪-வது, மஜூசிய்யாவின் விபரம். |
| ௪௬. | சல்மானுல்பாரிசி ரலியல்லாகு அன்கு அவர்கள் முஸ்லிமான செய்தி. |
| ௫௰. | ௫-வது, வதனிய்யா அதாவது புத்தை வணங்குகிறவர்களின விபரம். |
| ௫க. | புத்துண்டான ஆரம்பம். |
| ௬௰. | ௬-வது, தஹ்ரிய்யா அதாவது நேச்சர்களின் விபரம். |
| ௬௩. | ௭-வது, ராபுலிய்யாமுதல் வழிகெட்ட எஉ கூட்டங்களின் விபரம். |
| ௬௭. | மேன்மையான உம்மத்து முகம்மதிய்யாவின் ௭-மர்த்தபா விளக்கம். |
| ,, | முதலாவது, மர்த்தபா இஸ்லாம். |
| ௬௮. | உ-வது, மர்த்தபா ஈமான். |
| ,, | ௩-வது, மர்த்தபா சலாகு. |





| பக்கம். | விஷயம். |
| --- | --- |
| ௬௯. | ௪-வது, மர்த்தபா இஹ்ஸான். |
| ,, | ௫-வது, மர்த்தபா ஷகாதத்து. |
| ௭௰. | ௬-வது, மர்த்தபா சித்தீகிய்யா. |
| ௭க. | ௭-வது, மர்த்தபா குர்பத்து. |
| ௭௪. | தவக்குலென்னும் பாருசாட்டுதலின் வரிசை. |
| ௮௪. | கிடைத்ததைக்கொண்டு திருப்தி செய்வதின் வரிசை. |
| ௮௮. | தஸ்லீமென்னும் அன்பாலொப்பின் வரிசை. |
| ௯௰. | மேலெண்ணத்தை விடுகிறதின் வரிசை. |
| ௱க. | மவுத்தைப்பயான்செய்கிற விளக்கம். |
| ௱௩. | சகாவத்தென்னும் ஈகையின் வரிசை. |
| ௱௰. | வாகிகானவர்களுக்குக் கிடைக்கிற நன்மையின் விபரம். |
| ௱௰௫. | சக்கிலென்னும் அறிவுமுன்னமை முன் அவைகையாயிருப்பதின் விபரம். |
| ௱௰௬. | ஆறு கல்பு நபுசு வகைபாகுக்கவாய் பயான் செய்யும் விளக்கம். |
| ௱௫௪. | ஆறுக்கு இரண்டு மறுஞானிகளின் இரண்டு பொருளுண்டு. |
| ௱௫௫. | கல்புக்கு இரண்டுபொருளுண்டு. |
| ௱௫௬. | அவைரியில் ஆறு நபுசு கல்பைப்பற்றிவருகிறவிபரம். |
| ௱௫௭. | நபுசையும் கல்பையும் அத்தாஆட்சிசெய்கிறது. |
| ௱௫௮. | நபுசென்று அதற்கு பலவிபத்துகளுண்டு. |
| ௱௬௰. | ஆறுகுறையவானி ஆறுகல்த்தானி. |
| ,, | ஆலமுல்கல்க்கு ஆலமுல்அம்ரு. |
| ௱௬உ. | எல்லா ஆறுகளுக்கும் நபியின் ஆறு ஆதாரம். |
| ௱௬௩. | நபுசென்னும் ஆத்மாவை அருளுறுசெய்வதின் பயான். |
| ௱௬௪. | சமாஉக்கு வேண்டியவைகளின் விபரம். |
| ௱௬௬. | கல்வத்திருப்பதின் விபரம். |
| ௱௬௬. | செய்குக்குவேண்டியவைகளின் விபரம். |
| ,, | காமிலான செய்கிடம் முரீதுக்குக்கிடைக்கிற பயிலென்னும் பலனின் பயான். |
| ௱௭க. | செய்குமுரீதை கலசாவுசெய்வது ௪-வகை. |
| ௱௭௬. | முகம்மது பாக்கியில்லாம்செய்த கவுதுஅஅகு. |
| ,, | ஜீபுதீறு அக்கின்ஸலாம் செய்ததவுதுஅஅகு. |


சமாதுன்மை இகலாநன்மை என்னும்

ரெக்கீகத்துல் இஸ்லாமின்

அட்டவணை-முற்றிற்று.

ஈமானுண்மை இசுலா நன்மை என்னும்

றைக்கிகத்துல் இசுலாமின்

# பிழைதிருத்தம்.

—()—

| பக்கம் | வரி | பிழை | திருத்தம். |
|---|---|---|---|
| க | அ | செய்யிகிறு | செய்யிகிது |
| ,, | ,, | ஆமசயி | ஆசமயி |
| உ | உச | பெயர்க்து | பெயர்த்து |
| எ | கசு | பேகலாட்டு | போலாகட்டு |
| கூ | ககூ | அன்கவர்களை | அன்குமா அவர்களை |
| கஉ | எ | நசாறுக்கன்னி | நசாறுக்களின் |
| () | உக | ஊழியூழிநாகம் | ஊழியூழிகாலம்நாகம் |
| கரு | கஎ | கூ-வது ஜூ-வு | கூ-வது ஜூ-வது |
| () | சஅ | நசாறுநகளில் | நசாறுக்களில் |
| () | உரு | முன்மை | புமுன்மை |
| கச | கச | நசம் | நஜூம |
| கரு | கக | பென்மேன்மை | பென்னுமேன்மை |
| () | கசு | செய்தார்கள் | செய்தாய் சொன்னார்கள் |
| () | உரு | மையத்துக்களே | மையத்துகளை |
| () | உஎ | கரக | காக |
| உக | ரு | பகலையிற் | பகலையிற் |
| உரு | ருரு | ளிழுவில் | ளிழுவில |
| ருக | கஉ | யான் | யானை |
| ருஉ | கரு | கலிமாயிருக்கும் | கலிமாவாகயிருக்கும் |
| ருச | உசு | படைக்கவும் | ப்படைக்கவும் |
| ருரு | உ | இரண்டம் | இரண்டாம் |
| () | கஎ | காடு | காடு |
| ருசு | உசு | யுடையவரா | யுடையவரர் |
| ருஎ | கஎ | ஆயர்க்க | ஆயர்த்த |
| ருஅ | கரு | கொடுத்தாள் | கொடுத்தார்கள் |
| ருசு | உரு | தன் | தான் |
| ச() | உஉ | திருப்பதலவர் | திருப்பதாவர் |
| சக | கரு | டிமலே | டுமலை |
| சஉ | க() | பாதிரிகளே | பாதிரிகளிர்பத்துபேர்களை |
| சரு | சு | ஊயத்தாகி | ஊயாத்தாகி |



| பக்கம் | வரி | பிழை | திருத்தம். |
|---|---|---|---|
| சரு | உ | தபசிறல் | தப்சிறல் |
| சசு | உச | முஸவிமான | முஸ்லிமான |
| சஎ | ச | அவச | அவர் |
| ருஉ | சு | முஸரிக்கு | முஷ்ரிக்கு |
| () | உஅ | ருவமாகவும் | ருவமாகவும் |
| () | ருஉ | களில் | களில |
| ருச | ருரு | பழைத்து | பழைத்து |
| () | () | சொல்லே | சொல்ல |
| ருரு | கரு | தொப்பாரி | டிபாரி |
| ருஎ | ருக | நடந்துதவி | நடந்துஅவர்கட்குதவி |
| ருஅ | எ | லாமிருல் | நாமிலுல் |
| ,, | கசு | டசாதாகி | பசுதாகி |
| ருகூ | உஉ | மஜூஉலிபா | மஜூஉலிய்யா |
| சாய | உகூ | ஜீத்தி | ஜூத்தி |
| ,, | உசு | வானே லோகங்களையும | வானலோகங்களையும் பூ |
| | | டைத்தாருகின்ற பூலோக | லோகங்களையும்படைத்தா |
| | | ங்களையும் அ | ருகின்ற அ |
| சாச | சு | தேகே | தேகன் |
| ,, | கரு | றப்பு | றுப்பு |
| சாரு | ரு | காலக | காலை |
| ,, | ,, | முவுதறு | முவுத்தாக்கு |
| சாஅ | அ | போல் | போரில் |
| ,, | கூ | பெரிப்வா | போய்வர |
| ,, | உஎ | பிபத்து | பயத்து |
| சாகூ | ரு | னுங்களின் | னுகளின் |
| எ | உகூ | அன்கு | அன்கும் |
| ,, | ருஉ | மாவதறு | மாவது |
| எரு | உ | மூரீது | மூரீது |
| எகூ | ச | வாகட்டு | வர்கட்டு |
| அய | உரு | னானின் | னானில் |
| அக | உ | வெளி | வழி |
| அரு | கக | மலக்குகை | மலைக்குகை |
| ,, | கரு | மன்கூசன் | மன்கூசன் |
| அரு | ககூ | மடுனா | மதனா |
| ,, | உய | தோ | தேடு |
| கூக | கரு | அதைப்பொதிக்க | அதுபொதிக்க |
| கூரு | உய | வேரு | வெரு |
| கூகூ | ருய | அவனோ | அவரை |
| கூஎ | உஉ | காரத் | காவுங் |

| பக்கம் | வரி | பிழை | திருத்தம். |
|---|---|---|---|
| சுஎ | கூஉ | இதசாதல்பிவிரா | இறவுதாதல்வரபிரி |
| சுக | உச | எருக்து | ஒருக்து |
| எக | உ | எருக்கு | எனக்கு |
| சஉஉ | ம | ஒழிக்கென்னும் | ஒழக்கென்னனும் |
| கநந | ந | உக்துமிலம் | உக்துஆன |
| ககடு | அச | நிவரகாயத்து | நிவரயத்து |
| கந | க | அபுபின் | அவபின் |
| ,, | கஎ | ஆலாயும் | ஆனாவும் |
| கசக | க | வார்குதா | வானாகுதா |
| ,, | உடு | பாளு | பளு |
| கசஎ | டு | வக்தெற | வத்தெற |
| கசஅ | உஉ | பொருனொரன் | பொரூள்உண்மைமான் |
| கடுக | உக | கடல் | கவல் |
| கடுக | அக | ருமவு | ஒருமவு |
| கடுஎ | அ | சக்கரும் | சங்கரும் |
| ககக | க | மபகஙி | மகஙி |
| கசடு | உம | சருத்தல் | சருக்குதல் |
| கசஎ | கஉ | விரோதத்தைக்கவு | விரோதத்தாதிபுமகவு |
| கசஅ | எ | இவின் | ஆனவின் |
| ,, | ,, | றாலாகென் | இலாகென் |
| ,, | கக | வேளுமென்ற | வேளும் இயன்ற |
| ககக | உம | றதிபி | குதிபி |
| கஎக | கஉ | இல்காயில் | இல்காயி |
| கஎக | அ | காரர் | காரா |

பிழைதிருத்தம்

முற்றிற்று.

முபல்மிலன்.

# சிறப்புப்பாயிரம்.

காயற்பட்டணம்

கல்வைகுமது மகுதாமுகம்மதுப் புலவரவர்களின்

மாணாக்கரு ளொருவராகிய

திருநெல்வேலிப்பேட்டை

புலவர். த. அ. காதிறுமுகியித்தின்ராவுத்தர்

அவர்களியற்றியது.

இருமடி ஆசிரிய விருத்தம்.

சீர்பூத்த அறவுடைகுறு சயர்லவுக, வானமுத்
தேவர்சுவ ளங்களைகட
திசிரியலெ புவனம்வெளி யாசுகம் பூகமதி
தினகர னுடுக்கண் மனுவும்
ஜில்கனத் தொகுதியொடு யாவைப்பு மமைத்தவைக
டனவுணவு முயிர்க ளிலையும்
செயலறிவு மின்பதுன் பங்களுந் தந்தினிய
செங்கோல் செலுத்து மிறைவன்
ஏர்பூத்த பேரொளியின் முத்தா யுதித்தலைக
ளொரியுவரி யூடு புக்கு
ஏக்கின் மாத்தண்டி மயிலரேறி யமார்கட்
கின்பவறி யோதி யின்றே
எப்புவிக ளும்புகழ்ந் தேற்றுதகர் மக்காவி
னேரப் துல்லாவின் மகவா
யின்சொல்புறக் கான்வேத மேகொண்டு வந்தநம்
மிறைவர்மகு முதுநயினர்
பேர்பூத்த வுறவின்வழி கொண்டுநின் றுடியிருள்
பேர்த்திடக் கறையறுத்த
பெரியோர்க டன்மையொடு மெழுவகையின் மறுத்தபா
பெட்புறு தவக்க வியல்பும்
பேதகமி லாதாதி மார்க்கமிசு லாமென்று
பேறுமற் றது பாத்திலும்
பிகெல் புறிகலொடு கபுசுறா குறிதலும்
பேறுதலெ லாநிறைத்து

நேர்பூத்த ஈமானி னுண்மையிசு லாதன்மை
 யென்றநூற் பெயர்தந்தனர்
நீங்காது சாருலவு பொழிவிலனி பாடலும்
 நிலைபுற்ற வசாருவியும்
நிதமகிமை கொண்டதிரு நெல்வேலி பேட்டைவாழ்
 நெறிமுறைமை யறிவு நல்மை
நேமமணி செய்கப்துல் காதிருலி யென்ற
 நிபுணர்மவு லவியாமரோ

கலித்துறை.

ஈன்கம ழுந்திருப் பேட்டையில் வாழப்துல் காதிறெனும்
வான்கம ழாலி மவுலவி சாகிபு வாருடனே
தேன்கம ழீமானி னுண்மை இசுலாதன்மை திவ்வியபேர்
ஊன்கம ழுத்தந்த நூலிசு லாத்தின் நிறலணியே.

எழுசீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்.

ஆதியின் மார்க்க நேர்வழி யிகலா
 மாரிபின் மறுத்தபா வேழு
சோதிநூ கோடி நபுசுறி தனுமே
 துன்ப வின்பமுங் கவக்கனுமே
நீதியோர் நடப்பு சேர்ந்ததோ ரீமா
 னிலையுண்மை இசுலாத் தியல்நூற்
பேதியா தளித்தார் பேட்டைசெய் கப்துல்
 காதிரும் பேர்மவு லவியே.

கலிவிருத்தம்.

மூந்தின வழியே இசுலா மற்றது
நந்திய பாதிநு தவக்க லற்செயல்
இந்தவீ மானுண்மை இசுலா தன்மையைத்
தந்தனர் செய்கப்துல் காதிர் சாகிபே

வேறு-விருத்தம்.

தீனிசுலா முதனு மற்றவழி சேத
மானது முறாருகபு சேட்டமியும் வாறு
மேதவர மானிகலா தன்மைநல னெல்லாந்
தானருளி னாப்துல் காதிர தவத்தோரே.

வேதனபி மார்க்கநிதம் வாழியினி வாழி
விதிதமி ழாலுரையை விண்டவரும் வாழி
போதிய முறைக்கொழுகு முத்தமரும் வாழி
ஆதியருள் நினவர்கள் பெற்றவர் ஆமீன்.

பிசுமில்லா கிற்ரகுமா னிற்ரகீம்.

இஃது

# ஈமா னுண்மை இசுலா தன்மை.

அல்லாகுத்த ஆலாவின் றுதி.

நபிநாயகத்தின் சலவாத்து.

அறபுவாக்கியம்.

அல்கம்து லில்லாகி றப்பில் ஆலமீன் வல்லாகிபத்து லில்முத்தகீன் வஸ்ஸலாத்து வஸ்ஸலாமு
அல செய்யதினா சுலீதில் அமீன் ந அலா ஆலிகி வசகுபிகி அசுமயி
ன் ஹுவாயிதிவும்மதிகி இலாயவ்மித்தீன்.

இதாபின்வரலாறு தமிழ்வாக்கியம்.

எல்லாப்புகழும் புகட்சியும் எவ்வுலகங்களையும் யெப்படைப் புக்களையும்படைத்து பக்துகாத்து அவையவைகளின் தாரதரப்படி அன்னபானமீந்து மூமீன்கள் பேரில் அன்னைபிதாவினு மிகக்கிருபைகூர்ந்தாதரித்து அருளுகின்ற சர்வ வல்லமையுள்ள அல்லாகு றப்பில் ஆலமீனுக்காயிருக்கும்.

அவரவர்களின் அமலுகளுக்குத் தக்கவண்ணம் கூலிகொடுக்கக்கூடியகியாமநாள் பரியந்தம் கணக்கிலடங்காத அழகியசலவாத்தும்கோடானுகோடி மேன்மையான சலாமும் அவனின் றசூல்மார்க்ளுக்கெல்லாம் அதிபதியும் நாயகருமாகிய தெளிவிற் றெளிவாகிய

சமர்ப்பணம்.

...யமுள்ள ஆயாவிருப்பெருள் ஆத்துமனிடத்தின்மீதா
நீந்த ... மைவு சமகர்த்... ஆலிவைகள் மனர்கள்
பெரிய ... புகலினண்டி சன்னையுடைய...
பெற்றவர்கள் ... வார்கள் பேரிலும் மெல்லவும்
மக்களுக்கும் வைகுபேதங்கள் ... பேரிலும் உ
ண்டாவதாகவும்.

---

## அம்மாபஃது.

இந்நூல் உண்மையுள்ளோர்களுக்கும் நிலைமைகேட்பவர்க்கு
ம் பிரயோசனஞ் செய்யும்படியான நூலாய் யிருக்கும் மென்று
(ஆதிநீதம்பதம் ஆதிபிரதப்பதம்) மென்னும் கர்த்தர் அல்ல
வென்கிற வித்தாமில் சொல்லிய செப்தினைன்றி வேறொன்றுக்கு
ம்பழுதின்று அவசியம் நடக்கவேண்டிய முறைகளான சில்லிலங்க
ளையும் சம்மிகவா மார்க்கத்தின் மேன்மையும் அம்மார்க்கமும்
பொருமைக்கம் ஆதிரறுள் எல்லா நபிமார்களு மிருக்கின்றார்களென்
கிற ஆதாரத்தையும் அவ்வியாக்கள் செய்கிற மகாதுமைக்களிப்புமு
கைகளின் குணங்களையும் நடப்புக்களையும் இதிலெழுதிக்கிறது; அ
டிமைதாருக்ப்பவர் தப்பிருக்கைகளின் தப்பிருமைக் தனக்குக் கட
னாக இதுவா உதாரித்தின அவரிடுவ் மகுநீபு லேதன் இல்லை
மிலைமகுல் வாருள்ளனாக்கு இன்னானோபில் மூதலிடு ஆதிசுள
இருக்யுமளில் தெரிந்து பெத்து யாவருக்கும் னமுப்பிளக்குப்பொ
ருட்டு சுத்தத்தமிழில் பொழிபெயர்த்து (சமாதானமை இசைதான்
கும்) மென்னமாமோருபடி னெண் சபிரயசத்தி கேக்கத்தாமும், சா
மினகள்பக்கத்தாமும் இக்கிதாபின் பொருட்டாலும், மனக்கு
ம்பெனதிதால் துகளை சாறுமுன்ள நடக்கமுக்கும் அல்லாது
ச்குதை ஜெபத்தாப்பெய்து முதைகைமுதபெண்டும்மாத்தில் பா
திகேன்றும் உறுமொர்த்து உண்மைகொண்டு கல்வியம் செய்து
நடப்பமெம்படிதன் ஆக்சிசெய்தருள்வாருக வருவா துளியல்
குமல்வரில் வொருமேல் வளருத்த, பிள்ளைகளில் அறிய
ாது அறிய.



## மனுக்களின் ஆதிமோக்க விளக்கம்.

—————()•()—————

அல்லாகு சுபுஹானஹுவதஆலா குர்ஆன்கரீமில் இரண்டாவ
து அத்தியாயம் பத்தாவது ருக்குவில் மனிதர்களெல்லாம் ஆதியில்மார்க்
கத்திலும் சமானிலும் ஒற்றுமையாய் ஒரே கூட்டமா யிருந்தார்கள்
அதன்பின் ஒருவருக்கொருவர் பொருமைகொண்டு பிரிந்துபல
பலவகையாய்ப் பிரிந்தார்கள் அதின்மேலாய் அவர்களுக்குள்
மையைப் போதித்து நன்மைகளுக்கு சுவர்க்கத்தைக்கொண்டு, தீ
மையானவர்களுக்கு நரகத்தைக்கொண்டு அச்சமூட்டு
கிறவர்களும் மெய்யையும் நீதத்தையும் விபரிக்கும்படியான வேத
ங்களுடன் நபிமார்களை அனுப்பினேனென்றும், மெய்யான வேதத்
தைப் பின்பற்றி செவ்வுற்ற மார்க்கத்தாலும் நாம் நாடினவர்களுக்கு
நேர்வழியைச் செய்து முத்தியைடச் செய்கிறேனென்று திருவாய்
மலர்ந்தேன.

இதன்விபரத்தைப்பற்றி தப்சீர் ஹுஸைனீ, தப்சீர் ரஹ்மா
ன், முதலான கித்தாபுகளில் வருகிறதாவது மனுக்கள் ஆதமுடைய
நில ... ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் காலம் முதல் நூகு
அலைஹிஸ்ஸலாம் அவர்கள் காலம்வரை ஏகமனதோடு
இஸ்லாமின் பேரிலும் ஒற்றுமையாய் ஒரே அகீதாவின் பேரி
லும் ஒரே மார்க்கத்தின் பேரிலும் இருந்தார்கள் இதீஸ் அலைஹிஸ்
ஸலாமவர்கள் காலமுதல் நூகு அலைஹிஸ்ஸலாம
வர்கள் காலத்துக்கிடையில் குபிர் படர்ந்துவிட்டது ஆதம் அலைஹி
ஸ்ஸலாமவர்கள் காலத்திற்கும் நூகு அலைஹிஸ்ஸலாமவர்களுக்கும்
பட்டாயிரவருஷங் காலத்திற்கு யிடையில் ஆயிரவருடமாகவு
சொற்படிகாபிலென்பவன் ஆபீலென்பவரை கொலைசெய்தமுதல் தீ
மார்க்கத்தில் மனுக்களா யிருந்தார்கள் அவன் புதிதாய்த்தின பல
விக்கிரகங்களை விட்டதெல்லாம் வேறொரு சொற்படி மனிதர்கள்
ஆதம் அலைஹிஸ்ஸலாமுடைய காலத்தில் மாத்திரம் ஒரேமார்க்கமாயிருந்தார்களென்
அப்பால் பல்வேறாய்ப் பிரிந்தார்களென்று வருகின்றன.

## மனுசகள் இவ்வுலகிற்பிரசவிக்குமுன் ஆதியில் அர்வாகுடைய ஆலத்தில் ஓரே கூட்டமா யிருந்த விபரம்.

---

அல்லாகுத்தஆலா ஆதம் அலைகிஸ்ஸலா மவர்களை அவர்க்கு [illegible] இல்வைத்து ஒருசொற்படி சொர்க்கத்தை விட்டும் வெளிப்படுத்தி வாதுலகில்வைத்து அவர்கள்முதுகின் வலதுபாகத்தில் தடவச்செய்தான் அதிலிருந்தும் வெண்மையான சிற்றெறும்பின் கோலமாக சிலர் வெளியானார்கள் அவர்களை நீங்கள் என்றுமத்தைக்கொண்டு சுவர்க்கம்புகுதுவீர்களென்று அல்லாகுத்தஆலா சொன்னான். அப்பால் மறுபடியும் ஆதம்அலைகிஸ்ஸலாமவர்கள் முதுகத்தின் இடதுபாகத்தை தடவும்படி செய்தான் அதிலிருந்தும் கறுப்பான சிற்றெறும்பின்வடிவாய் சிலர்வெளியானார்கள் அவர்களை நீங்கள் நரகம்புகுதுவீர்கள் நான் பாராட்டமாட்டேனென்று சொல்லியபின் அவ்விருகூட்டத்தினின்றும் அறுதிமானவ்வாக்கு (அலஸ்த்து பிறப்பிக்கும்) நானுங்கள் நாயனல்லவாவென்க (பலா) மெய்தானென்று சரிசொன்னார்கள் இவ்விருகூட்டத்திலொருகூட்டம் சுபிமனமுடியப்பட்டும் ஒருகூட்டம் கட்டாயமாய்ப்பயந்து மற்றவர்களைப்பார்த்தும் ஆயர்ந்தும் அறுதிமானக்கொடுத்தார்கள் அப்போது ஆதம் மனிதர்களே என்னைத்தவிர உங்களுக்கு வேறுநாயனில்லை நான்தான் உங்களின் றப்பாயிருக்கும் என்னைநம்பி உண்மைகொள்ளாதவர்களையும் எனக்கு இணைவைத்தவர்களையும் பொமனாளிற் கடினமான வேதனைசெய்வேன் நீங்கள்கொடுத்த வாக்குறுதியைபோதிக்கும்பொருட்டு நபிமார்களையனுப்பி வேதங்களை யிறக்குவேனென்று அறிவித்தான் உடனே அவர்களெல்லாம் ஒப்புக்கொண்டு விண்ணப்பஞ்செய்தார்கள்.

அவ்வுடன்படிக்கைப்பொருளை சுவர்க்கத்தின் மாணிக்கக்கனிலொன்றில் எழுதிவைக்கப்பட்டிருக்கின்றன, அதைத்தான் கறுபத்துல்லாவின் கிழக்குமூலையி லிருக்கின்ற கருல் அஸ்வதென்ற பெய



போது சொல்லப்படுகின்றது நரகத்துக்குப்போனவர்கள் அதை முந்திமிட்டு அல்லது தொட்டு அல்லது அதின் நேரில்நின்று தப்பி அதைக்குறித்து மறு முதலானதும் நிறப்பிடத்தில் மன்னிப்புத் தேடுகின்றார்கள்.

அப்பால் ஆதம் அலைகிஸ்ஸலாமவர்கள் அத்த அறுவாகுடைய ஆலத்தில் தங்கள் மக்களை சிமானுகளும் பக்கிறுகளும் நல்லரூபமாகவும் கெட்டரூபமாகவும் பலவகையா யிருக்கக்கண்டு யென் றப்பே இவர்களெல்லோரையும் ஒன்றுபோலாக்கப்படாதா வென்க என்னைப்புகழ்ந்து சுக்குறுசெய்யப்படுகிறதற்காக இப்படி யாக்கினேன் இப்படி சுக்குறுசெய்கிறதுதான் எனக்குப் பிரியமென்று போதித்தான் அதன்பின் அம்மனுக்களடங்கலையும் அல்லாகுத்தஆலா ஆதம் அலைகிஸ்ஸலாமவர்களின் முதுகில் மீளவைத்தான்.

இன்னுமொரு நிவாயத்தில்வருகிறதாவது அல்லாகுத்தஆலா அசுமானம், பூமி, மலக்கு, ஜின், சய்த்தான், விலங்கினம், பறவை முதலிய படைப்புகளையும் ஆதம் நபி அலைகிஸ்ஸலாமவர்களைப் படைத்தபின் பெருமைநாள்பாரியத்தும் பாவா ஆதம் அலைகிஸ்ஸலாமவர்கள் முதலாய் துன்யாவில் வெளியாகின்ற பிச்சத்துக்களாகிய மனிதர்களடங்கலையும் சிற்றெறும்பின் கோலமாக நுட்பமான வடிவிலமைத்து அவர்களுக்கு அறிவையும் விவேகத்தையும் பேசக்கூடிய சக்தியையும் கொடுத்து அவர்களின் பிசுக்கு, வயசு, கஷ்டம், நஷ்டம், முதலானவைகளை எல்லாம் கட்டளையிட்டபின் மறைத்து ஆதம் அலைகிஸ்ஸலாமவர்களை அறபாத்து மலைக்குப்பின்னிருக்கின்ற நுமானென்னுந்தலத்தில் சுச்சமதாம் ஒன்பதாக் கெய்தியென்னும் அறபாதளிலாக்கி அவர்களின் முதுகை கிழில் அலைகிஸ்ஸலாமவர்கள் இரகால் தடவும்படி கட்டளையிட்டான் அவர்கள் தடவினவுடன் சில கல்குகள் சிற்றெறும்பின் ரூபமாய் அவர்கள் முதுக்குண்டினின்றும் வெளியாகின அப்பால் வெளியாகிய பிள்ளைகளின் முதுகினின்றும் ஒன்றுக்குப்பின் ஒன்றாய் யௌமனல் அல்லாகுத்தஆலா படைக்க நாடின பிள்ளைகளெல்லாம் ஒழுங்குபோல் ஒன்றிலிருந்து ஒன்றாக வெளியாகி அணிஅணியாய் நின்றார்கள் அவர்கட்கு அநேக அத்தாட்சிகளைப் போதித்து அவர்களை அல்லாகுத்தஆலா அழைத்து ஆதமுடையமக்களே உங்களுடைய ஆண்டவன் நானல்லவாவென்று கேட்டான் (பலா) மெய்தானீ யெங்களுக்கு நாயனென்று விண்ணப்பஞ்செய்தார்கள், அப்போது

நீங்கள்மென்னை வணங்கவேணும்மெனக்கு யாதொரு வஸ்துவை யும் இணைவைக்கப்படாதுமென்று அவர்களிடம் அறுதிமானம்வச ங்கிடங்களுக்குதான் நிசுக்குகளைக்கொண்டு பின்னேயெற்றுக்கொண் டேனென்று சொல்லியபின் அவர்களை ஞூழுக்குபோல் மறுபடியும் ஆதம்அலைகிஸ்ஸலாமின் முதுகந்தண்டில் மீள்வைத்தான் இனிஅந் தமீதாக்குடையவர்களில் வாக்குஉறுதிசெய்த மனுக்கஎடங்களும் இப்புவியில் பிரசவிக்கிறமட்டிலும் கியாமமுடியமாட்டாது (இன் னும்)அவர்களிலின்னும்பிந்தின அறுதிமானத்தை அதாவது நீசை கத்தில்நபிமார்கள்உம்மாக்கள்போதித்தஅறுதிமானம்அதை பெத் தி நிறைவேற்றினவர்களுக்கு முந்தின அறுதிமானம்அதாவது மேற் ற்கூறிய அறுவாகுடைய ஆலத்தில் பெல்லா செனங்களுஞ் செய் தவாக்குறுதி பிரயோசனங்கொடுக்கும் அதைக் காப்பாத்தாதவர் களுக்கு முந்தின அறுதிமானம் பிரயோசனஞ்செய்யாது நரகம டைவார்கள் பிந்தின அறுதிமானத்தை பெத்தாமல் சிசுவாய் மர ணமானவர்கள் முந்தின மீதாக்கென்னும் அறுதிமானத்தின் பேரி லும் அசலாகிய பித்றத்தென்னும் இஸ்லாமின்பேரிலு மவுத்தா கிறபடியால் இக்குழந்தைகளுக்கு சுவர்க்க முண்டாமென்று சில ரிமாமுகள் சொன்னார்கள் இச் செய்திகள் தபுசீர்ஙாகின் தபுசீர்ப குவீ தபுசீறுஙாவி முதலான கிதாபுகளில்வருகின்றன.

ஹதீது.

இதைப்பற்றி நம்மன் நாயகம் சல்லல்லாகு அலைகிவசல்லமவ ர்கள் அருளிச்செய்த தென்னவென்றால் குழந்தைகள் அடங்கலும் பிறக்கும்போது இஸ்லாமார்க்கத்தின்பேரிலேயேபிறக்கின்றார்கள் அப்பால் அவர்களின்மாதாபிதா அக்குழந்தையை எகூதியாகவுக சுறானியாக மஜூசியாக ஆக்கிவிடுகிறார்களென்று நமதுநாயகமாகிய முகம்மதுநபிசல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் திருவுளம் பற்றி னார்கள்.

இதன்காருத்து தாய்தந்தை குழந்தைகளை இஸ்லாமாக்கி விடு வார்களென்று நபிநாயகம் இந்தநதிதில்சொல்லாததினால் கியாமா வரையும்மென்னும் திட்டவட்டமான சமான் அத்தாட்சிக்குநபிவச னம் துடர்ச்சியைக்கொண்டு உண்டாகாது ஆரம்பத்தில் ஒருவனை அடுத்து மீமான்கொண்டால் மறுபடியுந் தன அறிவு அகலமுமமா யுற்றுணர்ந்து அத்தாஷித்தை அல்லாவே திருவுளமண்டா யிருக்கி றுமென்று அறிந்து உண்மைகொள்வது கடமை (ஆனால்) குபிரி



லக்குபத்தி சொருவனைத்துடர்கிறதுமல்லாமல் இவனுக்கும் குபுறின் டாகிவிடும் ஆதலின் குபிரில் யாவையும் துடப்படாது தாய்தகப்ப னுமிருந்தாலுஞ்சரி.

(இன்னும்) மேற்கூறிய ஹதீதில் தாய் தகப்பனென்று வந்த சொல்லின் பொருள் அநேகர்களும் கைத்திரங்களுமாயிருக்குமென் றுசொல்வதற்கும் இடம்பாடாகும அவைகள்தான்.றனாதாரமான தந்தைதாய ரிருக்குமென்று சிலபெரியோர்கள் சொல்லுகின்று ர்கள் (ஆகச்சே)"மாதாபிதாவின் தற்பியத்தைக்கொண்டு பின்னைகள் ஹக்கானவழியைவிட்டு விலகிப்போகக்கூடிய தன்மையையுடையவ ர்களாயிருக்கிறபிரகம் சேர்வழிகாட்டுகிறதற்குறு, காதியாவின் ஏல்லாமனுக்களும் சேர்மையுடையவர்களா யிருக்கின்றார்கள் இத ன்றுள் வழிகாட்டுவதற்கு அல்லாருத்தஆலா நபிமார்களைஅனுப் பிவைத்ததாயிறக்கியிருக்கிறுன.

(பின்னர்)ஹதுத்து நபிநாயகம் சல்லல்லாகு அலைகிவசல்லம வர்கள் அசுஹாபுகளோக்கி ஆய் என் அசுஹாபுகளேறுவொரு மனிதனுக்கும் இன்னன் சீதவி இன்னுமுகீதவியென்று பெழுத ப்பட்டிருக்கின்ற பட்டோலை யுண்டாயிருக்கின்றதெனச் சொல்லிய போது அவ்வாவின்றசூலே நாங்கள்பெயங்கள் பட்டோலையின்பேரி ல்பொறுப்புச்சாட்டி பெங்கள்வீதி பெகலாட்டுமென்று நினைத்துஅமு மல்களை விட்டுவிடலாமாவென்று அசுஹாபுகள்கேட்டார்கள் நீங்க ள் அமல்லைவிட்டுவிடவேண்டாம் பேயலைபெடுத்து விலக்கிக்கொள்வது கடவுங்கள் அல்லாருத்தஆலா ஒவ்வொருவனையுந்தன தாதாகப்படை த்தவைத்திருக்கின்றுதே அதனாலேல சாக்கிவைப்பாயென்றும் அதின்உண்மை உங்களுக்குத்தெரியாதென்றும் நீங்கள் அல்லாவி ன்உத்தரவின்படி செய்வையாய்ப்பட்டதுகடமை பென்றுநபிநாயக ம்திருவுளம்பற்றினார்கள்.

(இன்னும்)சாம்காடினதை அழித்து காம்காடினதைத்தரிபடுத் துவேனாம்படித்தில் உம்முல்கித்தாபு உண்டாயிருக்கிறதென்று அ ல்லாருத்தஆலா சூர்அன்சரீபு-13-வது-சுகவு-12-வது- றுக்கூகின்தி ருவுளம்பற்றி யிருக்கின்றுன் உம்முல்கித்தாபென்பது அல்லாவின் ஆகியானசாட்டமாயிருக்கும்.

(ரிவாயத்து) ஹஜறத்தையருப்ஹல் ஹைத்ராபிறவியல்லாகுத்தஆலாஅன்கு அவர்கள் மிகவும் சலித்து அழுதவர்களாய் கருபத்தூல்லாவை தவாபுசெய்துகொண்டிருக்கும்போது அல்லாகும்ம அல்லாகுவென்ற அருமையான நாமமுள்ளநாயனேயென்னை சிதேகிகளுண்டயதபுத்தரில் யெழுதியிருந்தால் அப்படியேயென்னை அதிற்றரிபடுத்திவைத்தருள், ஷகீதவிகளுடையதபுத்தரில் என்பேரையெழுதியிருந்தால் அதை அழித்து சிதேகிகளான மன்னிப்பு பெற்ற கூட்டங்களின்தபுத்தரில் தரிபடுத்திவைத்தருள் நீநாடினதை அழித்து நீநாடினதை தரிபடுத்தக்கூடியவன் உன்னிடத்திலேயேயம்முல்கித்தாபுஉண்டாயிருக்கிறதென்று சொல்லிதுஆ செய்திறவர்களாயிருந்தார்கள்.

(சுவால்) அல்லாவின்கலாலை முருவாராதும்கட்டமுடியாதென்றிருக்க துஆகேட்கிறதில்யென்னபலன் என்னபாயிதாவென்று கேட்கப்பட்டால்.

(ஜவாபு) துஆகேட்கிறது பலாவை தட்டுகிறதற்கும் றகுமத்தையிழுக்கிறதற்கும் காரணமாயிருக்குமென்றதும் அல்லாகுத்தஆலா கட்டளையிட்ட கலாமிதுவன்னதாயிருக்குமென்று ஜவாபு சொல்லப்படுமென்று யிமாம் கொஸ்லாலி றகிமகுல்லா அவர்கள் சொல்லியிருக்கின்றார்கள்.

இன்னும்அமலில்லாமல் சுவர்க்கத்தை தேடுகிறதுபாவமாயிருக்குமென்றும் ஹக்கிக்கத்துக்கு அடையாளம் இவன்செய்தஅமலை நினைக்கிறதை விடுகிறதேதவிர அமலைவிடுகிறதல்லவென்றும் ஹஜறத்து இமாமஹாஜல்பசரி றகிமகுல்லா அவர்கள்சொல்லியிருக்கின்றார்கள் இச்செய்திகள் தாருல்பயானில் வருகின்றது.

(ஆதலால்) நம்மனைவரையும் அல்லாகுத்தஆலா அசுஹாபுல்யெமீனென்றும் வலதுபாகத்தாராகிய சிதேகிகளுடைய கூட்டத்திலும் அவன்கலாவைப்பொருந்தி ஏவலையெடுத்து விலக்கலைத் தவிர்த்து நடந்த சாலிகான மூமின்களின்கூட்டத்தில் தரிபடுத்திவைப்பானாக ஆமீன் யாறப்பு யாசுய்யூம்.

——(*)——



## இசுலாமார்க்க விசுவாசிகள் அவிசுவாசிகளிம்மாத்திரமென்கிற விபரம்.

### ஹதீது.

ஹஜறத்து ஆதம்அலைகிஸ்ஸலாமவர்கள்காலமுதல் கியாமநாள்பரியந்தமுண்டாகின்ற மனுக்கூட்டங்களடங்கலையும் என்பேரிலெடுத்துக்காட்டப்பட்டது அப்போது எல்லாநபிமார்களையும்அவரவர்களினுமமத்துகளையுங்கண்டேன் அவர்களிற் சில நபிக்கு வழிப்பட்டமனிதர் யாருமில்லை சில நபிக்கு வழிப்பட்டவர்கள் ஒருமனிதன் சிலருக்கு இரண்டுமனிதர் சிலருக்கு ஒன்பதுபத்துப்பேர் சிலருக்கு சொற்பக்கூட்டம் சிலருக்கு மிகுந்தகூட்டம் இப்படி பலபலவகையாகக்கண்டிருந்தேன், அப்பால் மகாசங்கமாக அநேகவநேகசனங்கள் ஆகாயத்தை அடைத்துக்கொண்டிருக்கக் கண்டு இதோமிகுதியாயிருக்கின்ற பெருங் கூட்டங்கள் யாரென்று கேட்டேன், இவர்கள் உம்முடைய உம்மத்துகள் இவர்களில் எழுபதினாயிரம்பேர் கேள்வியில்லாமல் சுவர்க்கம்புகுவார்களென்று யெனக்கு அறிவிக்கப்பட்டதென்றுகமது இரட்சகராகிய ஹஜறத்து முகம்மது றசூலுல்லாகி ஸல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் திருவுளம் பற்றினதாக ஹதீது, தாருல்பயான் ஆரம்பாகத்தில் ஹஜறத்துயிபுனுஅப்பாசுறலியல்லாகு அன்கவர்களைத்தொட்டும் வருகின்றது.

(இன்னும்) இமாம் பகுவிறகிமகுல்லாஹ் அவர்கள் றிவாயத்துச்செய்திருக்கின்றதாவது ஹஜறத்து ஆதம் அலைகிஸ்ஸலாமவர்கள் காலந்தொட்டு நம்மன்காலவரையிலுமுண்டான உண்மையுடைய மூமின்களடங்கலு மொருகூட்டமாயும்பின்னுங் கியாமநாள்பரியந்தமுண்டாகிற மூமின்களடங்கலு மொருகூட்டமுமாகவிருக்குமென்று நமதுநாயகம் முகம்மது நபிசல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் திருவாய்மலர்ந்தருளினார்கள்.

(இன்னும்) மூமினான யென்னுமமத்துகள் சுவர்க்கவாதிகளில் பேர்பாதியாயிருக்கிறதை நானாதரவு வைக்கிறேனென்றும் என்னுமமத்துகளை சிறுக்கையுடையவர்களென்றும் வழிகெட்டுப்பாழகளான நரகவாதிகளுடன் மொத்த முங்கிகைக்களாக்

கிட்டப்பார்க்கில் நீங்கள் கறுப்புநிறமுடைய காளைமாட்டின் தோலிலுள்ள வெண்மையான ஓர்உரோமத்தைப்போலிருப்பீர் அல்லவென்று நமதுநாயகம் முகம்மதுநபிசல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் திருவாய்மலர்ந்தருளினதாக தபுசீர் மஆலிமில்வருகின்றது.

இன்னும், தப்சீர், மாருல்பயான் மூன்றாம்பாகம் 468 - 469 வது பக்கத்தில் வருகின்றதாவது நமதுநாயகம் மிஃறாசுக்குப்போன இரவில் ஆகாயவானத்தில் கலந்து மூசா அலைகிஸ்ஸலாமவர்களைக்கண்டு பேசிக் கடந்து சென்றபோது மூசாஅலைகிஸ்ஸலாமவர்களழுதார்கள் ஏனழுகிறீர்களென்று மலக்குகள் கேட்க எனக்குப் பின்னால் துன்யாவில் வெளியாகிய நபியான இந்தப் பிள்ளையின் உம்மத்துகளில் மிகுந்தபேர்கள் சொர்க்கஞ்சேருகிறார்கள் அவர்களை என்னும்மத்தைக்காணவு மற்றுமுண்டான உம்மத்துகளைக் காணவு மிகவு மதிகமாகவிருக்கிறார்களென்றுசொன்னார்கள் ஏனென்றால் சுவர்க்கவாசியானகூட்டங்கள் - 120-சப்பு, அவைகளில் இந்த நபியவர்களின் உம்மத்துகள் - 80 - சப்புகளாகவிருக்குமென்றார்கள், இதுவான்களை ஒலறந்து மூசா அலைகிஸ்ஸலாமவர்கள் அழுதார்களென்று கேழ்ப்பீராகில் இந்த நபியின்பேரில் கசதுவைத்ததற்காகவல்ல என்கிறும் தங்களும்மத்துகளின்பேரிற் கிருபைவைத்ததற்காகவேண்டி யழுதார்களென்று இமுஅல் மகிக்குறதிமிகுல்லா சொல்லியிருக்கின்றார்கள்.

அல்லாகுத்தஆலா நம்மனைவரையு மிந்த பரிசுத்தமான மேன்மைதங்கிய தீனுல்இசுலாமென்னு நன்மார்க்கத்தில்சேமமாக்கி நற்கரைசேர்ப்பாராக ஆமீன் யாஅர்ஹமர்ராஹிமீன்.

## மனுக்களின் பலவிதமான
## மார்க்கங்களின் விபரம்.

தீனென்றுசொல்லுகின்றது இருவகையாம்(முதலாவது)உண்மையானதீன் அதை தீனுல்ஹக்கென்றுந் தீனுல் இசுலாமென்றுந் தீனுல்லாவென்றுந் தீனுன்னபியென்றுந் தீனுல்முகம்மதியென்றுஞ் சொல்லப்படும் எல்லா நபிமார்களுக்குந் தீனென்னுந் தௌகிதும்



சமானும் மிகஉபாவு மொன்றாகவிருக்கும் குக்குமுகளானசிபந்தனையென்னும் சுற்பாடுமுறைமைகள் அந்தந்த உம்மத்துகள் தகுதிக்குத்தக்கவண்ணம் வெவ்வேறாக அல்லாகுத்தஆலாவால்ஏற்படுத்தப்பட்டது பிந்தியமார்க்கம் வந்தவுடன் முந்தின மார்க்கத்தை விட்டுவிடவேண்டியது கடமை முந்தினமார்க்கத்தில் தானிருப்பேனென்று வாதிக்கிறது அல்லாகுத்தஆலாவின் உத்திரவுக்கு எதிரியாய் மறுத்தழித்து விரோதம்பேசிக் கெட்டுப்போகிறதற்குக்காரணமாயிருக்கும் முந்தினமார்க்கத்திற்கு மன்சூக்கென்னும் பிந்தினமார்க்கத்திற்கு நாசிக்கென்றுஞ்சொல்லப்படும்.

ஆண்டவன் ஹக்கீமென்ற பூராயமுடையநாயனாக இருப்பதால் அவரவர்கள் தகுதிக்குத் தக்கவண்ணங் கட்டளையிடுவான், அதைநாம் அநுசரிக்கவேண்டிய கடமையேதவிர எதிர்வாதம்பேசுகின்றது குபிறாயிருக்கும் அடிமைக்கு வேண்டிய தென்னவென்றால் எசமானுக்கு வழிப்படவேண்டியகடமை எசமான் ஹக்கீமாயிருப்பதால் நலவைக்கொண்டேவுவானேதவிரக் கெடுதியைக்கொண்டேவமாட்டான் அந்தஎசமான் பரிபூரணமான அறிவுள்ளவனாயிருக்க கெடுதியைக்கொண்டேவினால் மடத்தனமென்றாகும் மடமையைவிட்டும் அல்லாகுத்தஆலா மிகப்பரிசுத்த மானவனை இதை யறியாமல் இபுலீசு கெட்டதுபோல் எகூதி,நசாறா,பறுகிமா,பலாசிபாமுதலானவர்கள் வம்புபேசி வாதித்துக் காபிறாகிவிட்டார்கள் (அனமல்லாகு முஅல்லிபுதா நஜ்லல்மதாரி ஒழிப்பாக்கும் மிமன்னிரி ஒசுறமிக)

(இரண்டாவது) பொய்யானமார்க்கம் அதைத் தீனுல்பாத்திலென்றுந் தீனுல்லலாலத்தென்றுஞ் சொல்லப்படும் இச்செய்திகள் ஆயில் அன்வார்,தப்சிறுத்துல், அகமதிய்யா முதலானகித்தாபில் வருகின்றது.

இனி, தீனுல்பாத்திலென்னுந் தப்பானமார்க்கங்கள் பலவகையாம் அவைகளைப் பற்றிக் கித்தாபுல் ஆமாலியில்சுசைவி றகிமகுல்லாகு அவர்கள் சொல்லிவருகின்றதாவது நரகத்துவாசற்கள் ஏழாக விருப்பதாற் கெடுதலான மார்க்கங்களும் ஏழாக விருக்கின்றது அதில்-1-வது எகூதிய்யா அவர்கள் மூசாஅலைகிஸ்ஸலாமவர்கள்மார்க்கத்திலிருக்கிறோமென்றுவாதுக்கிட்டுஅம்மார்க்கத்தைஅநேகமாக

மாறுபாடு செய்த யூதர்கள்-2-வது-நசுருனிய்யா அவர்கள் ஈசா அலைகிஸ்ஸலாமவர்கள்மார்க்கத்திலிருக்கிறோமென்று வழக்கிட்டு அம்மார்க்கத்தை அநேகமாக மாறுபாடு செய்து புரட்டி ஈசவை கடவுளின்குமாரனென்றுந் தெய்வமென்றும் ஆண்டவன் மூன்றென்று மூன்றுதானென்றால் ஒன்றுமூன்று மூன்று ஒன்றென்று சொல்லி வழக்கிடுகின்ற கிருஸ்துவர்கள்-3-வது-சாபியிய்யா அவர்கள் ஆதியில் எகூதி, நசாறுக்களின் மார்க்கத்திலிருந்து அதை விட்டு பின்பு நட்சத்திரங்கள் மலக்குகளை நாயனென்று வணங்குகின்ற முஷ்ரிக்குகள்-4-வது-அபுதாதுல் அவுதான் அவர்கள் கல், மரம், பஞ்சலோகங்களாகிய இரும்பு, ஈயம், செம்பு, பொன், வெள்ளிமுதலானவைகளாற் செய்யப்பட்ட சிலை உருவமுதலிய விக்கிரகங்களைத் தெய்வமென்று கொண்டாடிப் பூசித்து வணங்குகின்றகுப்பாறுகள் 5-வது-மஜூசிய்யா அவர்கள் நெருப்பை நாயனென்று வணங்குகின்ற பாரிசக்காபிர்கள் ஆக இவ்வைந்து கூட்டங்களும் நன்மை தின்மை யுண்டென்று ஒப்புக்கொள்வார்கள்.

6-வது தகுரிய்யா அவர்கள் அல்லாகுத்தஆலாவையும் அவன் றசூல்மார்களையும் ஒப்புக்கொள்ளமாட்டார்கள் அவர்கட்கு யாதொருவழியு மார்க்கமுமில்லை புத்தியால்பேசுவார்கள் நெறிநிலைப் புக்கொண்டு விசுவதிக்காத மனிதரடங்கலு மித்தத் தகுரிய்யாவிற் சேர்க்கப்படும். ஆக இவ்வாறு கூட்டங்களுந் சைத்தானுடைய கூட்டங்களாயிருக்கும் அவர்கட்கு ஊழி யூழிநரகம் அவர்களுக்கு யாருடைய ஷபாஅத்தும் உதவியு மன்றாட்டமுங் கிடையாது.-7-வது நருமானின்கூட்டங்களாகிய முஸ்லிம்களினின் அவ்வழிகெட்ட கவாரிஜ்-றவாபிழ்-ஜெபரிய்யா-கதிரிய்யா முதலிய-72-வழி சகினை பிதுஅத்துக்காரரென்னும் நூதனக் கொள்கையுடைய சனங்களும் தௌபாவில்லாமல் மரணமான பெரும்பாவிகளுமாயிருக்கும் இவர்கட்கு ஊழியூழிகாலம் நரகமல்ல அவர்களில் அல்லாகுத்தஆலா நாடிய சிலர்கட்கு மன்னிக்கப்போதும் ஆனால் சிறுக்கைவிட்டுக் குபிரைவிட்டுத் தௌபாச்செய்தவர்களாக மவுத்தாயிருக்க வேண்டும் அப்படித்தான் அவர்கட்கு ஷபாஅத்துண்டும் இச்செய்தி நாருக்ப்பான் ஆறுப்பாகத்திலும் வேறு கித்தாபுகளிலும் வருகின்றது.

---



## முதலாவது எகூதிய்யாவின் விபரம்.

சுலைத்து இபுறாகீம் அலைகிஸ்ஸலாமவர்களின்குமாரர் இசுகாக்கு அலைகிஸ்ஸலாமவர்களின் புத்திரராகிய யாக்கூபு அலைகிஸ்ஸலாமவர்களுக்கு இசுறாயீலென்று பெயர் இருந்ததால் அவர்களின்மக்கள் பன்னிரண்டுபேர்களுக்கு மற்ற வம்மிசத்தா ரடங்கலுக்கும் பனுஇசுறாயீலென்றுசொல்லப்படும் அவ்வம்மிசத்தினின்று மநேககாலத்திற்குப்பின் வெளியான இம்றானின் குமாரராகிய மூசா அலைகிஸ்ஸலாமவர்களின் சமுகத்தா ஏகூதிகளென்றும் யூதர்களென்றுஞ் சொல்லப்படும்.

குறு ஆன்சரீப்-9-வது-சூறா-8-வது-றுக்கூஇல் கண்டிருக்கிறதென்னவென்றால் தௌறாத்துவேதத்திலும் இன்சீல் வேதத்திலும் எழுதப்பட்டிருக்கிறதாய்க் காணுகிறார்களே அப்பேற்கொத்த உம்மியென்னு நபியாகிய றசூலைத்தொடர்ந்து நம்முடைய ஆயாத்துகளை யுண்மைகொண்டிடப்பார்களே அப்பேற்கொத்த எகூதி நசாறுக்களிலுமுள்ள மூமின்களுக்கும் நம்முடைய றகுமத்தையுண்டாக்குவோமென்றும் - 6-வது-சூறா-9-வது-றுக்கூஇல் எகூதி நசாறுக்களிலின்று நீதமானகூட்டமுள்ளசிலர் அவர்களி லுண்மையிட்டிருந்த மனமுரண்டாய் மாறுபாடுசெய்து கெட்டலைய அநேகமிருக்கிறார்களென்றும் அல்லாகுத்தஆலா திருவுளம்பற்றினான்.

இதன் விபரமாவது நமுதாயகம் முகம்மதுநபி சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களின் காலமுதற் கியாமநாள்வரையுமுள்ள எகூதிகள் நசாறுக்கள்முதலான வெல்லாசனங்களும் குறுஆனென்னும்வேதத்தையு முகம்மதுநபிசல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களை யுண்மைகொண்டு அவ்வேதத்திற்சொல்லப்பட்டிருக்கின்ற பிரகாரம் நடக்கவொழிய மோட்சமு மீடேற்றமுங்கிடையாது அவ்வேதத்தையும் அந்நபியையுந்தொடர்ந்துநடக்கும்படி அநேகம் ஆயத்துகள்வந்திருக்கின்றது (ஆனால்) அவர்களின்தௌறாத்து இன்சீல்வேதங்களிலும் முகம்மதுநபி சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களின் கீர்த்தியையும்; மேன்மையையும் சொல்லப்பட்டு அவர்களை ஒப்புக்கொண்டு நடக்கும்படி வந்திருக்க அவர்களதையநுசரியாமல் மாறுபாடுசெய்து அநேகம்பேர்கள் காபிராய்ப்போனார்கள்.

இந்த காரியமாகிய முகம்மதுநபிசல்லல்லாகு அலைகிவசல்லமவர்களின் புகழும் வரிசைப்புகளும் சற்குணங்களும் அவர்கள் மார்க்கத்தின் வரிசைகளும் அவ்வேதங்களிலிருக்க இவ்விதமாக பாழ்செய்து புகழை இருட்டிப்புப்படியானதாவது யூதர்களானவர்கள் இந்நபியைத் தங்கள் வம்மிசத்தில் வருவாரென்றெண்ணியிருந்தார்கள் அவ்விதம் வெளியாகாமல் அவர்களென்னுங் குலத்துக்கு விரோதமாகத் தங்களுக்கு முன்சுவத்தில் சத்துருக்களாயிருந்த குறைஷிவம்மிசத்தில் வெளியானகாரணத்தைப்பற்றி மனச்சடைத்து இவ்விதமெல்லாஞ்செய்து அநேகமாய்ப்புகழை இருட்டிப்புப்படுத்திவிட்டார்கள்.

இச்செய்திகள் அபிப்பான், தப்சீர், ஜமல்முதலான கித்தாபுகளில்வருகின்றது,

(இன்னும்) அவர்களிலொருவன் கியானத்துச் செய்தபின்பு இருசெய்தாலவனை நசாறாக்களின் நாட்டுக்குத் தள்ளிவிடவேணுமென்றிருக்க நாத்தடித்தார்ப்போலுமென்று பொய்யசொல்லிக்கொண்டார்கள். இதுபோல அநேகமாய் மாறுபாடுசெய்திருக்கிறார்களென்று அல்லாகுத்தஆலா - ௫ ம் - ஜுஸ் - 7 ம் ஆயத்தில் ஆகிக்கைசெய்திருக்கின்றான் அவைகளின் உண்மையான செய்திகளைப் பயான்செய்யப்பட்டிருக்கின்ற அசலான தௌறாத்துவேதத்தின் கிரந்தங்களைப்பிடித்த மனிதர்கள் அநேகம் அந்தப் பதிந்த எழுதிகளில் அப்துல்லாஇபுனு சலாமுதலான இஸ்லாமிக்கரும் நசாறாக்களில் நஜ்ஜாஷி முதலிய சில ராஜாக்களும் முகம்மது முஸ்தபா சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களின் மார்க்கத்தில்வந்து ஈடேறி மேன்மையடைந்தார்கள்,

---

## ஹிக்காயத்து.

நமது லட்சகரான செய்யிதுல் அன்பியா சகறுல் ஸபுகியஹாவாகிய முகம்மது முஸ்தபா சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் பிறக்கப்போகிற இரவில் - மிகுசீல் அலைகிஸ்ஸலாமவர்கள் இடத்தில் மூசா அலைகிஸ்ஸலாமவர்களின் கையுதகளில் நேர்வான்களான சேர்ந்து மீளாட்டுகின்ற சில வும்மத்துகளிருக்கிறார்களென்று அல்லாகுத்



ஆலா குர்ஆனிற்சொல்லிப் புகழ்ந்திருக்கிறேனே அந்த சனங்களை நான் கண்டுகொள்ள விரும்புகிறேனென்றதற்கு உமக்குப் போகாதுவருவும் வர அதுவருவடப்பமணியிருக்கிறது நப்பிட்டத்தில் கேட்டான், இ, வருலாக்கத் தருவாரென்க, நபிநாயகமவர்கள் அஞ்சு கோத்தவுடன் அல்லாகுத்தஆலா மிகுசீல் அலைகிஸ்ஸலாமுக்கு உத்திரவுகொடுத்தான்.

அவர்கள் நபிநாயகமவர்களை போர்திசில் ஓர் கூட்டத்தாரிடத்தில் கொண்டுபோய்விட்டார்கள் அக் கூட்டத்தாருடன் நபிசல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் பேசியபின்பு அச்சனங்களை நோக்கி நீங்கள் யாரென்றுகேட்கமேலும் மிகுசீல் அலைகிஸ்ஸலாமவர்களிடம் கேட்க அறிவிலென்றார்கள், இவர்கள் உம்பியர் மென்மை மிக்க நாமம்பெற்ற முகம்மதுநபியாக இருக்குமென சொன்னவுடன் அச்சனங்களெல்லாம் நபிநாயகமவர்களை விசுவசித்து ஈமான்கொண்டார்கள் அப்பால் அல்லாவின் றசூலே உங்களுக்கு சகறாத்து மூசா அலைகிஸ்ஸலாமவர்கள் தங்களைக்கொண்டு கனமாயிற்றெல்லி எங்களை நோக்கி இயாரவரொருவன் அகமது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களைக் குறம்பானுமில் சனங்களில் நின்றும் அவர்களுக்குச் சலாம் சொல்லவுமென வேண்டியதைச் செய்தார்கள்.

அதற்கு நபிநாயகமவர்கள் மூசா அலைகிஸ்ஸலாமவர்கள்பேரிலும் அச்சனங்கள்பேரிலும் சலாமுக்கு ஜவாபுசொன்னார்கள் அதின்பின்பு அக்கூட்டத்தாருக்குமக்கத்திலிறங்கிய பத்தாயத்துக்களையும் படித்துக்கொடுத்து தொழுகையையும் சக்காத்தையும் கொண்டேசிக் கம்ஆத்தொழுகையும் கற்பித்தான்பு. அக்கூட்டங்களைநோக்கி மையத்துக்களை உங்கள் வீட்டின்வாசலுக்கருகே அடக்கவேண்டியதென்ன காலையிலும் மாலையிலும் மௌத்தைநினைக்கத் தக்கவைகளுக்காகவென்றார்கள் உங்களுடையகட்டுப்பாடுகளாவதென்ன ஒன்று மற்றவரைவிட்டாட்சியிருக்கவேண்டியது ஏதென்ன காங்களில் இலவைக்காரத் திசைமேவிடாதிருப்பதற்காகவும் காறைத் தடையிருப்பதற்காகவுமென்றார்கள் உங்களில் தங்கள் காலிமுதலாகிய அதிகாரிகளில்லாதிருக்கிறகாரணமென்னவென்க, நாங்களொவ்வொருவரும் அவரவர்களின் ஹக்கைக்கொடுத்து நீதி

மாய்நடக்கிறதென்றார்கள் உங்களின்கடைகள் காலியாயிருக்கிற காரணமென்னவென்க, நாங்களடங்கலுமொன்றுசேர்ந்து பயிர்ச் செய்து அறுத்தடித்து அவரவர்கட்குத்தேவையான தானியங்களை யெடுத்துக்கொள்வோமாதலின் கடையளிற்செல்லவேண்டிய அவ சியமில்லை என்றார்கள்.

இந்தக்கூட்டத்திற் சிலர் சிரித்தவர்களாகயிருக்கவேண்டியகா ரணமென்னவென்க, ஒருமனிதன் ஈமானின்பேரிலும் நல்வழியின் பேரிலுமாகியிருந்து அப்படியே மரணமாவதைநாடிச்சந்தோஷ மாயிருக்கிறார்களென்றார்கள் இன்னுஞ்சிலர் அழுதவர்களாயிருக்க வேண்டியகாரணமென்னவென்க, அவர்கட்கு ஓர் குழந்தை பிறந் தது அது நன்மார்க்கத்திலிருந்து மவுத்தாகுமோ அல்லவோவென் றறியாததைப்பற்றி விசனமாயழுகிறார்களென்றார்கள் உங்களுக்கு ஆண்குழந்தைபிறந்தா லென்னசெய்வீர்கள் பெண்குழந்தைபிற ந்தாலென்ன செய்வீர்களென்க, ஆண்பிறந்தாலொருமாதமும் பெ ண்பிறந்தா லிரண்டுமாதமும் நோன்பிருப்போம் அதேனென்றால் ஆண் குழந்தையின்பேரிற் சபூர் செய்வதைக்காண பெண்குழந் தையின்பேரிற் சபூர்செய்வது அதிகநன்மையென்று மூசா அலைஹி ஸ்ஸலாமவர்கள் எங்களுக் கறிவித்தார்க ளென்றார்கள். உங்களி லியாருஞ் சூதுசெய்வார்களாவென்க, அவ்வேலைசெய்தவனை பூமி சுரியவாங்கிவிடும் அல்லது இடிவிழுந்து மரணமாகி விடுவானென் றார்கள் வட்டிவாங்குவீர்களோவென்க, அல்லாவின்றிக்கைக்கொ ண்டு நம்பிக்கையில்லாதவன்றான் வட்டிவாங்குவானென்றார்கள், உங்களுக்குப் பிணியுண்டாகுமோவென்க. நாங்கள்பாவஞ்செய்ய மாட்டோ மெங்களுக்குப் பிணியும்வராது பிணிவருகிறது பாவ த்திற்குத் தெண்டமாயிருக்குமென்றார்கள். உங்கள் பூமியில் துஷ்டமிருகங்களுண்டோவென்க. உண்டு நாங்களதைத் தீங்குசெ ய்யமாட்டோம் அதுவுங்கேடடைந்தாலும் எங்களைத் தீங்குசெய் யாதென்றார்கள். அப்பால் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் அம் மனிதர்களுக்கு அந்தவிடத்திலேயே குடியிருக்கும்படி உத்தரவு செய்தார்கள் இச்செய்தி தப்சீறுல்மஆனிம் அருகில்பாகவையற வில் வருகின்றது.

—[*]—



ஹிக்காயத்து.

தன்பீறுல் காபிரீன் என்கின்ற கித்தாபில் கலறத்து துருக மாதுல் குஸாஆவென னும் இபுனுஅப்பாசு றலியல்லாகு அன்குமா அவர்களைத்தொட்டும் சைகுல்இமாம் அபுல்லைது சமர்க்கந்தி றகிமகு ல்லா அவர்கள் எழுதிவருகின்றதாவது ஷாமுதேசத்தி லோர்ஊகி யான தேர்ந்த அறிவாளன் தங்களுக்கு சம்மாவான சனிக்கிழமை யன்று தன்பிதாக்களின் பூர்வீகமாய்ப் பெட்டகத்திற் பூட்டிவைத் திருந்த தௌறாத்துவேதத்தைத்திறந்துவைத்து ஓதி வரும்போது நமதுநாயகம் சர்வலோ காயினுக்குமுபகாரி யருநாயகம் றகுமத்து லில் லாலமீனாகிய இறசூல் சல்லல்லாகு அலைகி வசல்ல மவர்களி ன் வர்ணிப்பும் புகழ்ச்சியு நான்கு எல்லையில் வரக் கண்ட வுடனே போறாமைகொண்டு பொறிகலங்கிப் புத்திகெட்டு வர்ணிப்புகளும் வசீபுகளுமிருந்தகடிதங்களை நமதுநபி மூசா அலைகிஸ்ஸலாமவர்களைக் காணா இவர் வியர்த்தியாவென்று கறுக்கித் தீயிலிட்டான் மறுசனிக் கிழமையன்று முன்போல ஓதிக்கொண்டுவரும்பொது எட்டிடத்தி ற்கண்டு கறுக்கித் தீயிலிட்டான் மூன்றாவது சனிக்கிழமையன்று பன்னிரண்டிடத்திற்கண்டு தன்றுற்றோனை ஆலோசித்து நாமினிமே லைக்கு மாறுபாடுசெய்தாற் பிந்தியிந்த தவுறாத்துவேத மடங்கலும் அந்தநபியவர்களின்வர்ணிப்பாயிருக்க நாம்கண்டாலென்ன செய்ய லாமென்றுநினைத்து கறுக்காமற் றன்சினேகிதரிடத்தில்வந்து முக ம்மதுயாராயிருக்குமென்றுகேட்டார்.

அவர் பொய்யராயிருக்கும் அவரைநீ பார்க்கிறதைக்காணபா ர்மலிருக்கிறது நலமென்றுமற்றவம்பர்கள்சொல்ல என்னையாருந் தடைசெய்யவேண்டாம் தௌறாத்து வேதத்தின்பேரி லாணையாக அந்தசிறப்புற்றோங்கிய நபியவர்களை நான் கண்டு கொள்ளத்தான் வேண்டுமென்றுசொல்லி அவர்தன் வாகனத்திலேறி இரவும்பகலு மாய்நடந்து மதினமாநகரத்திற்கருகேவந்து சல்மானுல் பாரிசிறலி யல்லாகு அன்கு அவர்களைக்கண்டார் அவர்கள்முகவசீகரத்தையுஞ் சவுந்தரியத்தையு முடையவர்களாயிருந்தமையால் நீங்கள் தானா முகம்மதுசல்லல்லாகு அலைகிவசல்லமென்றுகேட்டார் அப்போது

நபிசல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் உபாத்தாகி றப்பின்சமூகஞ்
சென்று மூன்றுநாளாயிருந்தபடியால் சல்மானுல்பாரிசி றலியல்லா
குஅன்கவர்கள் அழுதுகொண்டு நான் அவர்களின் தொண்டிலுழி
யனாகிய அப்தாயிருக்குமென்றார்கள் அதைக்கேட்டவர் அந்தநாயகம்
எவ்விடத்திருக்கின்றார்களென்க நபிநாயகமவர்கள் உபாத்தாகிவிட்
டார்களென்றால் இவர்தன் ஊருக்கு திரும்பிவிடுவார அவர்கள்கயா
த்தாயிருக்கிறார்களென்றால் நமதுசொற்பொய்யாகிவிடுமே என்று
சல்மானுல்பாரிசி றலியல்லாகு அன்கவர்கள் ஆலோசித்து என்னு
டனே வாரும் அவர்களின் அசுகாபிகளிடத்திலும்மைக்கொடுபோ
ய்விடுகிறேனெனச்சொல்லி அழைத்துப் பள்ளியிற்கொண்டுபோய்
விட்டார்கள்.

அந்நேரம் அசுகாபுகளெல்லாம் சலிப்புற்றவர்களாயும் வியா
குலமடைந்தவர்களாயு மிருக்கச்சே இவர் போனவுடனே நபிநாய
கமவர்கள் அந்தசீவுபயிலிருப்பார்களென்றெண்ணி அஸ்ஸலாமு அ
லைக் யாமுகம்மதென்று சொன்னார் நபியவர்களின் திருநாமங்கேட்
டவுடனே சகாபாக்கள் சப்தமிட்டழுதுகொண்டு நீர் யாராயிருக்கு
மெங்களின் ரணங்களையுங் கல்பின்புண்ணுகளையும் புதிதாக்கிவைத்
துவிட்டீரே அன்னியதேசத்தாராயிருக்குமோ எங்கள்நாயகம் உபா
த்தாகி மூன்றுதிவசமாச்சுதே இதையறியீரோவென்றார்கள் அதை
க்கேட்டமாத்திரமே இவர்தன் ஆபாரங்கொண்டு அபயசப்தமிட்ட
ழுது என்சலிப்பே என்சபர்பழுதான துக்கமே என்தாயென்னைப்
பெறாதிருந்தாளில்லையே பெற்றாலுந் தௌறாத்துவேதத்தை நான்
ஓதாதிருந்தேனில்லை ஓதினாலும் அந்தயாட்சிமை தங்கிய முகம்மது
நபியவர்களின்மகிமையை அவ்வேதத்திற்காணாதிருந்தேனல்லை அ
ந்தவர்ணிப்பையும் வசுபுகளையு மதிற்கண்டும் அவர்களை நானென
து கண்குளிரக்காணவேண்டியதிருந்ததே அது எனக்குக் கொடுத்து
வைக்கவில்லையே என்றுகவலையுற்றவராய் இங்கே அதகபியின்வர்
ணிப்பையெனக்குச்சொல்வதர்க்காக அலிஎன்பவர்வுண்டோவென்
று கேட்க ஆமென்று அலியுன்றலியல்லாகு அன்கு அவர்கள்
சொன்னார்கள் உடனே நானுங்களின் நாமத்தைத் தௌறாத்துவேத
த்திற்கண்டிருக்கிறேனென்றார் அப்பால் நபிநாயகம் அவர்களின்
லட்சணங்களையுங் குணக்குறிகளையுஞ் சொல்லுகின்றேன் அவைக
ளாவன. அந்தமெய்யாகியநாயகம் மிகவும்நெட்டையுமல்ல கட்டை
யுமல்ல சிரசுவட்டமானவர்கள் நெற்றிவெளிச்சமானவர்கள் இருக



ண்களின்மணி மிகக்கறுப்பாயும் விழிவிசாலமாயு மிருக்கும் இரண்
டு புருவமும் விருதுவானவர்கள் தாங்கள் சற்றேசிரித்தாலும் பற்க
ளினின்றும் ஒளிவுபுறப்பட்டு மின்னலைப்போல்பிரகாசிக்கும் நெஞ்
சினுடைய வயமுமட்டிலும் உரோமங்களுண்டாயிருக்கும் இருகையு
ங்காலுங் கெட்டியாயிருக்கும் பாதத்தினுட்காற்பள்ளமாயிருக்கும்
இரண்டுதோளுக்குமிடையில் காத்தமுன்னுபுவா வென்னும் முத்தி
ரையுமுண்டாயிருந்ததென்று சையதுனா அலியுன்றலியல்லாகு அ
ன்கவர்கள்சொல்ல அலிமே இவ்விதமேநான் அந்தநாயகத்தின்லட்
சணத்தைத் தௌறாத்துவேதத்திற் கண்டிருக்கின்றேன் அவர்கள
ணிந்த ஆடைகளினின்றும் ஓர்பிடவை யுண்டோ அதை நான்கண்
ணில்வைத்து முகர்ந்துகொள்ளவேண்டுமென்க.

சல்மான்பாரிசு றலியல்லாகு அன்கு அவர்களையழைத்து பிபி
பாத்திமா றலியல்லாகு அன்கா அவர்களிடம்போய் உங்கள் பாவா
அவர்களின் சுப்பாவை அனுப்பும்படி நான்சொன்னதாய்ச் சொல்
லிவாங்கிக்கொண்டு வாருங்களென்றனுப்பினார்கள் உடனே சல்மா
னுல்பாரிசிறலியல்லாகு அன்கு அவர்கள்விரைந்துபோய் பாத்திமா
றலியல்லாகு அன்கா அவர்களின்வீட்டுவாயலைத்தட்டிநபிமார்களு
க்கெல்லாம் பெருமையானவர்களின் வாசலே ஒலிமார்களுக் கெல்
லைந்தினத்தானவர்களின்வாசலே எனச்சொல்லி யழைத்தார்கள்
அப்போது இமாம்ஹசன் ஹுசைன் றலியல்லாகு அன்குமா இவர்க
ளிருவரும் அழுதுகொண்டிருக்கிறார்கள் சல்மானுல்பாரிசு றலியல்
லாகு அன்கு அவர்களின் சப்தத்தைக்கேட்டு இத்தாத்திமக்களுடை
ய வாயலைத்தட்டுகின்றவர்க ளியாரென்று பாத்திமத்சகறா அவர்கள்
கேட்க நான் சல்மானுல்பாரிசு என்று நடந்த வரலாற்றை முற்றி
லுஞ்சொன்னார்கள் உடனே அழுதுகொண்டு அந்தயாட்சிமை தங்
கிய சுப்பாவையெடுத்துக்கொடுக்க அவர்கள்வாங்கிக்கொண்டு வந்
து ஹலறத்து அலிறலியல்லாகு அன்கு அவர்களிடத்திற்கொடுத்த
வுடனே வாங்கி அதைத்தாங்கள்முத்தமிட்டு அப்பால் அசுகாபிகள்
முத்தமிட்டபிறகு அந்தயூதமுதேசத்தி லிருந்துவந்த [illegible] ஏகதிவாங்கி
முத்தமிட்டு இம்மாத்திரம் கஸ்தூரிவாடைகமழும்படியா யிருக்கின்
றதே இதென்னபுதுமையென்று சொல்லி ஆச்சரியமுற்றவராய்நபி
நாயகமவர்களின் சிறப்புற்றபெரிய மகத்துவந்தங்கிய[illegible]மையை
த்தருகின்ற ஹவுலாவின் பக்கத்தில் வந்து நின்றுகொண்டு தன்தலை
யைவானத்தளவுயர்த்தி அண்ணார்ந்துபார்த்துயாறப்பி உண்[illegible]

யாகவே ஒருவனாகவும் தனித்தவனாகவும் பழுதாயும் சமதாயுமிருக்கி றாய் உனக்குயேதொரு இணை துணை இல்லை எல்லாவல்லனுக்கான, விழ் டுக்கேள்வைமற்றவன் என்னுதான் உதாதத்துக் கலிமாச்சொல்லி உண்மைகொண்டு விண்ணப்பஞ்செய்கிறேன் இன்னும் மெய்யாக இ ந்தக்கோரி என்னும் நவுலாஸில்வீற்றிருக்கின்ற நாயகம்மெய்யான உனது தூதராயிருக்குமென்று சாட்சிசொல்லுகின்றேன் அவர்க ள்சொன்னகருமங்களைக்கொண்டு மவர்களையுண்மையாக்கிவைத்து விண்ணப்பஞ் செய்கிறேன் (அல்லாகுமம) அதிபெரிய ஆண்டவ னே நான் இம்மார்க்கத்திற்சேர்ந்து இசுலாமானதை நீசபூற்செய் திருந்தால் இப்பவே என்னாலைகவாக்கிச் சேதவித்தனம் பெற்றவ னாகவுத்தாக்கென்று சொல்லிநிர்க்கவுடனே மௌத்தாவராய்க் கீழேவிழுந்தார் அப்பாலவரை அவிறனியல்லாகு அன்கு அவர்கள் கையாற்குளிப்பாட்டி எல்லாருஞ் சேர்ந்து தொழுவித்து ஜன்னத் துல்பக்கியில் நல்லடக்கஞ்செய்தார்கள் றகுமதுல்லாகுத்தஆலா வ ஊசறனுபி ஸைபுறத்தில்லாவின் மென்னிலெகறமியாபியை (அய்) அன்பர்களே இவர் ஆரம்பம் எவ்விதவிரோதியா யிருந்தாரோ அ தைக்கான அனேகமாக இணக்கத்திலாகி தன்னுயிரைத்தீனுக்காக குறுபானிகொடுக்கிறமட்டினும் நேசப்பத்தாகி நபிநாயகமவர்களைக் காணவேண்டுமென்ற ஆவலுடன் துன்பானவை வெறுத்தே ஆகிறக் கைதேசித்து முத்திபெற்றதை சற்றே உங்களின் கல்பால் ஆலோ சித்துப்பாருங்கள் அவ்விதமாலோசிக்கில் உண்மையும் நல்வழியுந் தோன்றும் நம்மனைவரையும் அல்லாகுத்தஆலா நேர்வழியில் சே மமாக்கிவைப்பானாக ஆமீன்,

——(*)——

## யூதர்களின் பிரிவு.

——*——

எகூதிகள் (எக) கூட்டம்அவர்களிற் சிலர்கலறத்மூசா அலைகி ஸ்ஸலாமவர்கட்கு இறங்கிய தௌறாத்தென்னும் வேதத்தின் பிரகா ரம் ஆரம்பமுதல் நமதுநாயகம்சல்லல்லாகு அலைகிவசல்லம் மவர்க ள்காலம்வரை நீதமாயிருந்தார்கள் அவர்கள் யாரைப்போலென்று ல்திசைதேசத்திற்குப்பின்னுற் கிழ்திசையின் கடாசியில் நகரஅவுதா மென்னுமெல்லையிலிருந்த எகூதிகளாயிருக்கும் அவர்களில் யாரும் ஸ்பொருளுன்பொருளென்று ஒருவருக்கொருவர் வம்பு வழக்கு ச்செய்யாதநீதவான்கள் அவர்கட்கு இரவையில்மழைபெய்யும் பக லையிற்பயிர்ச்செய்து இபாதத்திற்குதவியாய் புசித்துவணங்குவார் கள் அவர்கட்கு நமதுநிறுல் விசலாமென்னு மார்க்கம் எட்டாமல் மூசாஅலைகிஸ்ஸலாமவர்களின் தீனின்பேரிலாகியிருந்தமையால் வ ழிகெட்டவர்களல்ல ஆனால் மூசாஅலைகிஸ்ஸலா மவர்களின் தௌ றாத்துவேதத்திற்கு விரோதமாய்ப்பிரிந்தகூட்டத்திலிரண்டுகூட்டத் தின்விபரத்தைத் இதிற்சொல்லுகின்றனன்.



(முதலாவது சாமிரிய்யா) அவர்களியாரென்றால் சாமிரென்ப வன்செய்த காளைமாட்டை வணங்கினசனங்கள் அதன்விபரம் மூசா அலைகிஸ்ஸலாமவர்கள் தூர்சினுவென்றமலையில் வழமைபோல்றப் பிடம்முனாசாத்துச்செய்து தௌறாத்துவேதங்கொண்டு வருகிறே ன்நாற்பதுநாட்செல்லுமென்று சொல்லிவிட்டுப்போயிருந்தநேரத் தில் அவர்கள் உம்மத்துகள் இருபதுநாளை பகலையுமிரவையும் இ ரண்டெண்ணுகணக்கிட்டு நாற்பதுநாளாச்சுதே நம்பள்நபியவர்கள் ஏனின்னம்வரவில்லையென்று தியக்கி யோசித்துக்கொண் டிருக்கும் போதுசாமிரென்பவன்தான் சிசுவாயிருந்த வேளையில் கலறத்துஜி புரீல்அலைகிஸ்ஸலாமவர்களைக் கண்டிருந்ததால் பிறகூனுடையகுதி ரைசீலாற்றில்மிறங்கத்தட்டழிக்கநேரம் ஜிபுரீல்அலைகிஸ்ஸலாமவர்க ள்பறகஸ்கயாத்தென்னுங் குதிரையிலேறிவந்து முன்னேநடந்தவே ளை. பிறகூன்குதிரையுந் தொடர்ந்தது சாமிரென்பவன் பறகஸ்கயாத் தென்னு குதிரையின்காலடியினின்று மெடுத்து வைத்திருந்த மண் ணை அவனும் மூசாஅலைகிஸ்ஸலாமவர்களின் கவுமுகளும் முன் பிற கூனுடைய கூட்டத்தாரினின்றும் இரவல்வாங்கிவைத்திருந்த நகை களை ஓர்காளைமாட்டின் ரூபமாய் உருக்கிவார்த்து அந்தமண்ணை அ தன்வாயிலிட்டான் உடனே அந்தக்காளைக்குஉயிருண்டாகி சப்தமி ட்டது அப்போதுஅந்த சாமிறியென்பவன் சனங்களைநோக்கிஇது தான்மூசா அலைகிஸ்ஸலாமுக்கு முங்களுக்கு நாயனாயிருக்கு மூசாந பிநாயனைத்தேடித் தூர்சினுவுக்குப்போனார் நாயனிங்கேவந்திருக் கிறது இந்தநாயனைத்தான் அவரும்வணங்கினார் நீங்களும்வணங்கு ங்களென்று சாமிறியென்பவன் சொல்ல அநேக சனங்கள் ஒப்புக் கொண்டு அந்தமாட்டைவணங்கினார்கள் அப்பால் மூசா அலைகிஸ்ஸ லாமவர்கள்வந்து இதைப்பார்த்தவுடன் விசனமடைந்து இவர்களை த்தௌபாச்செய்யும்படி கண்டித்தார்கள் அநேகர் தௌபாச்செய்

ய்துமீண்டார்கள் சிலர்மீளாமல் மாட்டைவணங்கிகாபிராகிவிட்டா
ர்கள் இவ்விதம் தப்சீர் மஜ்லிஸ் சமல் முதலிய கித்தாபுகளில் வரு
கின்றது.

---

ஹிக்காயத்து.

இமாம் நசபீறஹிமகுல்லா அவர்கள்பேசி வருகிறதாவது, ஆபி
தீன்களிலொருவர் நடந்துபோகிறவழியில் ஒருவன் ஓர்மாட்டைத்
தெய்வமென்று வணங்கக்கண்டு ஓய்மனிதனே (லாயிலாக இல்லல்
லாகு) அல்லாகுத்தஆலா ஒருவனேதவிர வேறேயாரு நாயனில்லை
என்றகலிமாவைச்சொல்லென்றதற்கு அதைநான்சொல்லமாட்டே
னென்றான் உடனே ஆபிது அம்மாட்டைநோக்கி ஓய்மாடே (லாயி
லாக இல்லல்லாகு) வென்னுங்கலிமாவின் உண்மையைக் கொண்டு
நீநெருப்புக்கட்டியாய்விடு என்றார்கள் உடனே அல்லாகுத்தஆலா
உதவிகொண்டு அம்மாடுநெருப்புக்கட்டியாகிவிட்டது அப்பால்வ
ணங்கியநாயனைப்பார்த்தாயா இப்பவே அக்கலிமாவைச்சொல் இ
ல்லாவிடில் நீயுமதுபோலாகி விடுவாயென்றார்கள் உடனே கலிமா
வைச்சொல்லிமுசிலிமாகிவிட்டார்.

---

ஹிக்காயத்து.

சாலிகான அவுலியாக்களிலொருவர் கலம்சேவித்கொண்டிருக்கு
ம்போது ஒரு எகூதி அவர்களிடத்தில்வந்தான் அப்போது ஆப் இ
ன்றைனவெகுநாளாய் நானுன்னை எங்களிசுலாமார்க்கத்தி லாகும்
படிசொல்ல நீ ஒப்புக்கொண்டாயில்லை இப்போதாவது இசுலாமா
கிவிடென்றுசொல்ல நான்இசுலாமாக மாட்டேனென்று சொன்ன
ன்மறுபடியுமவர்கள் நீஇசுலாமாகுஇல்லாவிட்டால் நான்எழுதுகின்ற
கலத்தின் தலையை நறுக்கிவிடுவேனுடனே உன்தலைகீழே விழுமென்
றார்கள் நறுக்கும்பார்க்கலாமென்றான் அவர்கள் அந்தக் கலத்தின்
நுனியைத்தறித்தார்கள் உடனே அந்தஎகூதியின் சிரசு தன்சடலத்
தைவிட்டும் பிரிந்து கீழேவிழுந்தது இவ்விதம்றவுலில் அபுக்காரீன
ன்கின்ற கித்தாபில்வருகின்றதாய் நசகதில் மசாலிசிற்கண்டிருக்
கின்றது.



(இரண்டாவது உசைரிய்யா) அவர்களியாவென்றால்சறகிய்யா
வின்புத்திரராகிய உசைருநபி அலைகிஸ்ஸலாமவர்களை அல்லாகுத்
தஆலாவின்பிள்ளையென்று சொல்லுகின்றஎகூதிகள் (அதன்காரண
ம்) பனூஇசுறாயீல்கூட்டத்தார் அக்கிரமங்களு மனியாயமு மநேக
விதமர்ன்பிழைகளும் பசாதும் செய்ததைப்பற்றி விலகும்படி அல்
லாகுத்தஆலாகட்டளை இட்டதற்கு மறுபடியு முன்னடத்தையான
குற்றங்களைவிட்டு நீங்காமல்அதிகமாய்க் கெடுதிசெய்யத்துணிந்தா
ர்கள் அப்பால் அல்லாசபுகானகூவத்தஆலா பாபலென்னுமூரிலிரு
ந்த (பக்துநசர்) என்கின்றவம்பனைச்சாட்டினான் அவன் ஆறுலட்
சங்கொடிகளுடனே அநேகந்தளங்களைச்சேகரித்துக்கொண்டு வரா
முகேசத்திற்குவந்து சிறப்புற்றோங்கிய பைத்துல் முகத்தசப்பள்
ளியை இடித்துப்பாழாக்கி யதிலலங்கரிக்கப் பட்டிருந்த இரத்தின
ங்களில் ஒருலட்சத்தியெழுபதினாயிரம் ஒட்டகைப்பாரம் இரத்தின
ங்களையுங்கொள்ளையிட்டுக்கொண்டு அங்கிருந்த பனூஇசுறாயில்கூட்
டத்தாரைமூன்றுபங்காக்கி ஒருபங்குசனங்களைக்கொன்றான் ஒருப
ங்குசனங்களைச் சாமுதேசத்திற்றுரிபடுத்தினான் ஒருபங்குசனங்களை
ச்சிறைவாரிக்கைப்பிடியாய்ப் பிடித்து அவர்களை அப்துகளாக்கித்
தனக்குஒத்துமைபாயிருந்த இராசாக்களுக் கிடையிற் பங்கிட்டுக்
கொடுத்தான் சிறையில்கப்பட்டசனங்களில் (௪௰) சிறுகுழந்தைக
ளொவ்வொருராசனுக்குக்கிடைத்தது அவர்கட் கிடையில் உசைறு
அலைகிஸ்ஸலாமவர்களுமகப்பட்டிருந்தார்கள் அவர்கள் பலகீனமா
னகுழந்தையாய்த் தெரிந்தபடியால் அவர்களையதிகமாய் பந்தோப
ஸ்துச்செய்து கடினமானகாவலுங் கட்டுப்பாடுஞ்செய்யவில்லை சில
காலத்திற்குப்பின்னர் ஆண்டவன்கிறுபையால் அந்தவம்பர்களைவி
ட்டு மீட்சிபெற்றுத் தங்கள்சனங்களிலிருந்த தேசஞ்சென்று குடி
யிருந்தார்கள்.

அப்பாலநேகங்காலத்திற்குப்பிறகு அவர்களோர் வாகனத்தி
ன்பேரிலேறி பைத்துல்முகத்தசைநாடிவரும்போது பைத்துல்மு
கத்தசு இலாக்காப்பூமியை மிகவுங்கேவலமாகவும் வீடுகளிடிந்ததாக
வும் குடிகள்பாழானதாகவுங்கண்டு மனவருத்த முற்றவர்களாய் இ
ப்பூமிபாழாய்க்கிடக்கின்றதே அல்லாகுத்தஆலா எப்படி சயாத்தா
க்குவான் சனங்கள்எப்போது குடியிருப்பார்களென்று வியாகூலத்
துடனே சொல்லிவிட்டு அங்கிருந்தஓர்மரத்தினிழலில் தங்கள்வாக
னத்தைக்கட்டிவிட்டு அத்தேசத்தைச் சுற்றிப்பார்த்தார்கள் அவிட

த்தில்யாருமில்லை அங்கே அனேகமரங்களின் மிருகங்களிருண்டா யிருந்தது அவைகளில் அஞ்சிரென்னுஞ் சிமையத்திப் பழத்தையுங் கொடிமுந்திரிகைப்பழத்தையும் புசித்துத்தின்று கொஞ்சங்கொடி முந்திரிகைப்பானைப்பிழிந்து குடித்துவிட்டு கொஞ்சநித்திரைசெய் தார்கள் அந்தநித்திரையினாநூறுவருடம் அல்லாகுத்தஆலா அவர்க ளைமரணமாக்கினான் அப்போது வாலிபமாகவிருந்தார்கள் அவர்க ளோடு கொஞ்சமத்திப்பழமு முந்திரிகைப்பழமும்பானியுமிதமிரு ந்தது அல்லாசுபுகானகுவத்தஆலா அவர்களின் சரீரத்தையுமவ ர்கள்வாகனத்தின்சரீரத்தையுமனுடர்கள் அவ்வாய்மிருகங்கள் பற வைகளின் பார்வைகளைவிட்டும் மறைத்து வைத்திருந்தான் அவர்க ள்மரணமாகி எழுபதுவருடஞ் சென்றபின்பு பாரிஸ் ராசாக்களி ன் றும் பூசக்கென்றஒராசன் பைத்துல்முகத்திஸ் இலக்காவைப்ப ரிபாலனஞ் செய்யும்படியாயும் அநேகமானசனங்க ளுடனேவரும் படி அல்லாகுத்த ஆலாசெய்தான் அச்சனங்கள்பைத்துல்முகத்தஸ் பூமியையும அதன்பள்ளிவாயலையும்பரிபாலனஞ்செய்தார்கள்.

அப்பால் பகுத்துநசரின்சிரசின்மூளையிலோர்கொசுநுழைந் து அவன்மூளையைத்தின்றுவருத்தமடைந்துசாவும்படி அல்லாகுத்த ஆலாகலாக்காககினான்பனுஇசுறுயீல்கூட்டத்தில்மீதமானசனங்கள் சலாமத்துப்பெற்று பலதேசங்களிலுஞ் சிதறி நின்ற சனங்களெல் லாம் பைத்துல்முகத்தசப்பூமியளவில் மீண்டுவந்து குடியிருந்தமு ப்பதுவருடம் அப்பூமியை ஆண்டு முன்னிருந்ததைப்பார்க்கிலுமிகு தமான அழகான கோலத்தி லாக்கிவிட்டார்கள் கலந்துஉசைர் அ லைகிஸ்ஸலாமவர்கள் மௌத்தாகி நூறுவருடத்திற்குப்பின்னர் அல் லாகுத்தஆலா அவர்களை எழுப்பினான் அங்கேஒர்மலக்குவந்துநீவ் வளவுகாலசீர்நித்திரைசெய்தீர் என்றுகேட்டார்கள் அதற்குஉசைரா ள்அல்லது அதிற்சிலதிற்குநித்திரைசெய்து தரிபட்டிருப்பேனென் றார்கள் அப்படிக்கில்லை நூறுவருடமட்டிலும் நித்திரையில்தரிபட் டீர் அல்லாகுத்தஆலாவின் குதறத்தைநீர்கண்காட்சியாய்க்காண்ப தற்காக உம்முடைய ஒசிபனமென்னும் அத்திப்பழத்தையும்கொடி முந்திரிகைப்பானியென்னுமும்முடைய குடிப்பையும்பாரும் இவ்வ ளவுகாலஞ்சென்றும் பேதகமாகாமல் அப்படியேயிருக்கின்றதுஉம் முடையவாகனந் தனவிறேட்டையும் அதுமரணமாய் எலும்புகள் வெவ்வேறுய்உக்கியிறந்து பிரிந்துகிடக்கின்றது இவ்விதமெல்லாம் செய்தது உம்முடையகல்புசமாதானமாய் இக்காலத்தி லிருக்கின்ற



சனங்களுக்கு உண்மை அத்தாட்சியாயுந் திஷ்டாந்தமாயும் அம்ம னிதர்களுக்கு (தௌறாத்து) வேதம்மறந்து தட்டழிந்தவர்களாயி ருப்பதுகொண்டு உம்மிடத்திலவ்வேதம் மனனமாய் பெலாயிருப்ப தைப்படித்துக்கொடுப்பதற்காகவும் திஷ்டாந்தமாக வும்மையாக் கினைத்தோம் இன்னூர்பாழாயிருக்கும்போது நீர் இந்தேசத்தைஎப் படிகயாதாக்கவைப்பானென்று சொன்னீரே அந்தவிதத்தைநீ ர்கண்டுகொள்ளுமென்றதற்காக உமதுவாகனத்துடைய எலும்புகளை எல்லாஞ்சேர்த்து மீளவைத்து அதற்குதசைகளை மறைத் து ஒப்படியுமிருந்தபடி யெழுப்புகிறேனென்று பாருமென அல்லா குத்தஆலா [illegible] அந்தமலக்குஅறிவித்தார்.

அவன் கெட்டவனாயிருந்தா லெனக்கெதிரில் மிகுந்த கெடுதிகளும் துன்பங்களு முண்டாயிருக்கிறது அதை நீங்கள் பார்க்கவில்லை என்னை மெள்ள மெள்ளக் கொண்டுபோங்களென்பான் (இன்னும்) கபுறில் வைத்து அவனை மூடப்பட்டால் இரண்டு கறுப்பான மலக்குகள் கண்கள் சிவந்தவர்களாய் அவனிடம் தலைமாட்டுப் புறத்திலின்றும்வராநிற்பார்கள் அவனை யெழுப்பிப்பேசுதலாய் அல்லாவைப்பயந்து வணங்கின தொழுகை எதிரில் நின்று உமக்கு இவ்வழியில்லை இதைப்பயந்தே இரவுகாலங்களின் முழித்துவணங்கினேனென்று சொல்லும் இருபாதத்தின் வழியே அந்த இரண்டு மலக்கும் வரும்போது அவன் தாய் தகப்பனுக்குச்செய்த நன்றி வந்து நின்றுக்கொண்டு இந்த எனக்கையப்பயந்து தாய் தகப்பனுக்கு நன்றி செய்தவனைப் நடந்தவனை இவ்வழியா லிடப்படாதென்றுசொல்லும் அப்பால் வலதுகைப்பக்கம் வராநிற்குனல்த் துன்யாவில் அவன் கொடுத்த சதக்காத்தடுக்கும் இடதுகைப்பக்கம் வராநிற்குனல அவன் நோன்பு யெழும்பினின்று தடுக்கும் அப்பால் நித்திரை செய்தவனை யெழுப்புகிறதும்போல் யெழும்பி யவனைநோக்கி இந்த முகம்மது நபிசல்லல்லாகு அலைகிவசல்லமவர்களினின்றும் எவ்விதம் விசுவாசங்கொண்டாய் எதின்பேரிலா யிருந்தாயெனக் கேட்பார்கள்.

அதற்கு சாலிகான மனிதன் என்னசொல்வானென்றால் அவர்கள் அல்லாகுத்தஆலாவின் றசூலென்று வுண்மைகொண்டு சாக்ஷிசொல்லுகிறேனென்க அவ்விரண்டு மலக்கும் நீர் மூமினாய்ச்ஜீவித்து மூமினாய் மரணமுற்றீரென்று சொல்லிக் கபுறை விஸ்தீனமாக்கி யநேக வெகுமதிகளைச் சொரியப்படும் அவன் குறாஆன் ஓதினவனாயிருந்தால் அதன் ஒளியே யவனுக்குப் போதுமாகி விடும், இல்லாவிடில் சூரியனைப்போலவனுக்கு கபுறில் ஒருஒளிவை ஆக்கப்படும் அப்படியே மணவறைமாப்பிள்ளையைப்போ லுறங்குவான் (இனி) கெட்ட காபிர் அல்லது முனாபிக்கு கபுறிற்புகுந்தால் அவ்விரண்டு மலக்கும் உன்னுடைய றப்புயார் உன்மார்க்கமென்ன உன்



னபியாரென்று கேட்டால் நானறியமாட்டேனென்பான் வுடனேயறியமாட்டயாவென்று தங்கள் கையில் வைத்திருக்கிற தண்டாயுதத்தாலடிப்பார்கள். அவர்கள் சப்தம் கோடை இடிபோலும் அவர்கள்பார்வை இராநூகின்ற மின்னலைப்போலுமா யிருக்கும் காலையிலு மாலையிலு மவன்பேரில் நரகத்தைபெடுத்துக்காட்டப்படும் இச்செய்தி தம்பீகுல் காபிலீனில் வருகிறது (இன்னும்) சில நவிகள் கபுறின் தலைமாட்டில் சொற்கத்தினவி லொருவாசலைத் திறக்கப்படுமென்றும் முறீதவிகளுக்கு நரகத்தினவி லொருவாசலைத் திறக்கப்படுமென்றும் தக்காயக்குல் அக்பாறில் வருகின்றது (ஆகலால்) அல்லாகுத்தஆலா நம்மனைவரையும் கபுறின் அதாபுகளைவிட்டுங்காத்து முன்கர்வ நக்கீரென்னு மிரண்டு மலக்குகளுக்கு சவாபுசொல்ல உதவிசெய்வாராகவும் ஆமீன்யாறப்பல் ஆலமீன்.

—0—

## ரிவாயத்து.

ஒரு பெரியோர்களிடத்தில் தாங்களெங்கிருந்து வருகிறீர்களென்க் கேட்கப்பட்டபோது இன்ன இடத்திலிறங்கி டேறு அடித்து மண்ணறையிற் குடிகொண்டிருக்கிற கபுறாளிகளிடத்திலின்றும் வந்தேனென்க தங்களுக்கு யேதுசொன்னார்க ளென்றதற்கு நீங்களெப்போது பிரையாணிப்பீர்களென்று அவர்களை நான்கேட்க நீங்களெல்லோரு முன்னேக்கினை நேரத்தில் நாங்கள் பிரையாணிப்போமென்றார்கள். நான் கபுறாளிக ளிடத்தி லேனிருக்கிறேனென்றால் அவர்களிடத்தில் நான் ஊரிருந்தா லென்னை கோவினை செய்யமாட்டார்கள் அவர்களைவிட்டு மறைந்தா லென்னைக்குறித்துப் புறம்பேசமாட்டார்க ளென்றார்கள்.

## ஹதீது.

மனிதர்களே சிறுநீரைவிட்டும் பரிசுத்தமாய்ப் பேணிக்கொள்ளுங்கள் அதைப்பேணுதிருக்கிறதினின்றும் கபுறுடைய அதாபு அ

டங்களுமேசரிதியென்று நபிசல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள்திரு வாய்மலர்ந்தருளினார்கள் (இனி) சஜுதாவைக்கண்டபோது (லாயிலாக இல்லல்லாகுல் ஹய்யுல்லதீலாயமூத்) தென்றுசொல்லுகிறது முஸ்தகப்பு.

—()—

### ஹிக்காயத்து.

ஹஜறத்து இமாம்மாலிக்கு றலியல்லாகு அன்கு அவர்கள் மரணமா னபின் கனவிற்கண்டு அல்லாகுத்தஆலா உங்களை என்ன செய்தா னென்று கேட்கப்பட்டபோது உதுமான் றலியல்லாகு அன்கு அவ ர்களை ஜனாசாவைக்கண்டஇடத்திற் சொல்லிவந்தகலிமாவைவாகுத் சொல்லி வந்தபொருட்டால் அல்லாகுத்தஆலா எனக்குப் பிழை பொறுத்தான் அக்கலிமா (லாயிலாக இல்லல்லாகுல் ஹய்யுல்லதீ லாயமூத்து) என்றதாயிருக்கும் என்று சொன்னார்கள் (இனி) பொய் மோசங்கோள் கொலை இவைகளைவிட்டும் தவிர்ந்து தொழுகைசதா க்கா குர்ஆன்ஓதுதல் தஸ்பீகு திக்ருசெய்தல் இவைகளைப்பேணி ப்பற்றிப்பிடிக்கிறது கபுறுவினிருளையகற்றிப் பிரகாசத்தைக்கொடு க்கும் கபுறிடத்திற்சிரிக்கிறதும் கேள்விகேட்கிற சமயமான அதி க்கியமுடன் பேசப்பேசுகிறதும் குர்ஆன் ஓதும்போது வீண் பேசப்பேசுகிறதும் தொழுகையில் விளையாடுகிறதும் அல்லாகுத் தஆலாவுக்குப்பொருத்தக்கேடாயிருக்கும்.

(இன்னும்) சக்கறாத்து வேளையினும் கபுறிற்சென்றபோதும் மகஷறின்னும் குர்ஆனையோதுகிறது மிகுந்தபலனைக் கொடுக்கும் இச்செய்திகள் தப்சீருல்காபிலினிலும் தகத்திலும்வருகின்றது. (ஆம்) அன்பர்களே இவ்வுலகில் எவ்வளவுகாலமிருந்தாலும் கடைசி ஒருநாள் மவுத்தாக வேண்டியதிருக்கிறதென்று அறிந்து அதற்கு வேண்டிய ஆயத்தியென்னும் தொழுகை லக்காத்து நோன்பு ஹஜ்ஜு முதலிய நல்லமல்களைப்பொழுது போக்கில்லாமல் நிறைவேற்றி வரும்படி றப்பில் ஆலமீன் நமக்கு நல்லுதவி செய்தருள்வானாக ஆமீன்.

—



## சகாவத்தென்னும் ஈகையின் வரிசை.

குர்ஆன் ஷரீபு மூன்றாவது ஜுசவு யேழாவது றுக்கூவில், ஆய் மூமினுகளானவர்களே நீங்கள் சம்பாதித்த ஹலாலான பொருட்களினின்று மின்னும் உங்களுக்காக நாம் பூமியில் உற்பத்திசெய்து தந்த தவசதானியம் கனிவர்க்கமுதலானவைகளிற் கெட்டதைக் கொடாமல் நல்ல வஸ்துக்களினின்றும் செலவு செய்யுங்களென்றும் அல்லாவை நாடி நீங்கள் செலவுசெய்கிற பொருட்கள் உங்களுக்கே பூரணமாய்க்கொடுக்கும் அதன் கூலியை யுங்களளவில் நிறைவேற்றப்படும் தவிரவென்னும் பலனில் யாதொன்றையு முங்களுக்குக் குறைக்கப்படாதென்றும் பூமியிற் பலபல ஊர்களுக்குச்சென்று தொழிற்செய்ய சம்பாதிக்க வேலாமல் தடைபட்டு இபாதத்திலும் தீனின் வேலையிலுமிருக்கின்ற புக்றாக்களென்னும் ஏழை யெளியோர்களுக்கு உங்கள் பொருட்களைச் செலவு செய்யுங்கள். அவர்கள் கப்போலக்கொத்த புக்றாக்களென்றால் எந்த மனிதனிடத்திலும் எனக்கு யேதாவது தரத்தான் வேணுந்தால்தான் விடுவேனென்று அவர்கள் அலட்டி அலட்டிக்கேளாமல் பத்தினித்தனத்திலிருக்கிறதைப்பார்த்து அவர்கள் அந்தரங்கத்தை அறியாத மடையர் அவர்களை இந்தசனங்கள் பெரிய சீமான்களென்றுயெண்ணுவார் ஆனால் அப்படியல்ல அவர்களுக்கிருக்கிற பெலகீனம் கேவலமுதலிய அடையாளங்களைக்கண்டு அவர்கள் மிடிமையையுங்கஷ்டத்தையும் பார்த்து நீர்தான் அவர்களை அறிவீரென்றும் அல்லாகுத்தஆலா திருவுளம்பற்றினான்.

—

### ரிவாயத்து.

—

இந்த ஆயத்து வந்ததின்காரணமாவது குறைஷிகளினின்று மூமினுகளிய சில முகாஜிரீன்கள் பெருமி தங்கள்தீனைக்காப்பாற்றுவதற்காக அல்லாவின் றசூலை விரும்பி சொத்துச் சுகங்களைவிட்டு மக்கத்தினின்று மதீனாஞ்சென்ற ஜனங்களில் நானூறு பேருக்கு மதீனாத்தில் குடியிருக்க வீடு பெண்சாதி பிள்ளை குட்டிதானி யாதொன்று

க்கிடையாது அவர்களிற் தலைமையானவர்கள் அபூஹுறைறாவென்னு
ம் அப்துல் ரகுமானி புசுருது தமிமல்லாகு அன்றும் இவர்களின்
சரித்திரமாவது அவர்கள் மதீனத்துப் பள்ளியின்பின்புறத்திலொரு
தலத்திற்றங்கி இரவுகாலங்களில் குறுஆனைப் படிப்பார்கள் பகற்
காலங்களில் சச்சங்கொட்டைதீன புறக்கியுடைத்து வித்துகளைக்க
ளிப்பார்கள் இபாதத்து வேலைகளாகிவிட்டால் வேறொரு வேர்த்தி
யும் வையாமல் ஜமாஅத்தின் முதலின வரிசையில்வந்து நிற்பார்கள் எ
வ்வளவு கஷ்டம் பசிமுதலான துன்பங்களிருந்தாலும் தொழுகைக்
குப் பிந்தக்கமாட்டார்கள் தகஜ்ஜுது இருஅத்துநிக்குமுதலான
வணக்கங்களை விடாமல் நேமமாய்க்கொண்டு செலுத்துவார்கள். ர
க்கீசமாவது பசியினாற் பொறும்படி நேரிட்டால் நபியவர்கள்
அவர்கள் இவர்களைபுகழ்ப்புவார்கள் பிசுபிலின் முதலின அணியில்
நிற்பார்கள் இன்னும் அந்நேரத்தில் நபிநாயகம் அவர்களிடத்தின்
நீதமிருக்கின்ற அன்னபானமுதலான வஸ்துக்களை அவர்கட்குக்
கொடுப்பதுமுண்டு அப்படியே அந்த ஜனங்கள் காலங்கழிக்கிறவர்
களாயிருந்தார்கள் அவர்களுக்குப்பேர் அஸ்காபுஸ்ஸுப்பாவாகவிருக்
கும் ஒருநாள் நபிகளவர்கள் அதிதிகளவர்களிக்க அசுகாபு
சுப்பாவென்னும் பள்ளி திண்ணையிற் குடியிருக்கின்ற புக்களுக்குண்டா
ய கஷ்டத்தையும் மிடிமையையும் பார்த்து அதேய பிள்ளைகளோன்
னும் ஏழையாகிய அசுகாபு சுப்பாவென்ற ஜனங்களே நீங்கள் சந்
தோஷம் பெற்றுக்கொள்ளுங்கள், என்னும்மத்துகளில் எவராவது
ஒரு மனிதன் நீங்களிருக்கின்ற வன்னிப்பைக்கொண்டிருப்பானானால்
அவனை அந்த வன்னிப்பின் பேரில் அல்லாகுத்தாலாவைச் சந்திப்
பானாகில் அவனென்னுடைய தோழர்களில் உள்ளவனாயிருக்கு
மென்று நபிநாயகம்திருவாய்மலர்ந்தருளினார்கள் இவ்விதம் ஆகுல்ப
யானிலுமஹறாஜித்துவாயியிலும்வருகின்றது (இன்னும்) அசுகாபுஸ்
ஸுப்பாக்கள் எழுநூறு பக்கீறுகள் நபிநாயகத்தின் பள்ளியிலிருந்
தார்கள் ஒருவரும் வியாபாரத்திலாயினும் பயிர்வேளாண்மை செய்
கிறதிலாயினும்செல்வத்திராளி பெறமாட்டார்கள் ஒருவக்துத்
தொழுகை தொழுதீர்த்தவுடன் மறுவக்துத் தொழுகையை
வழிபார்த்தவர்களாயிருப்பார்களென்று தப்சீர் மஆலிமில் வரு
கின்றது.



## றிவாயத்து.

நபிநாயகம் அவர்களின் அசுகாபுகளின் மிகவு மிடிமையான
வொருவருக்கு ஒருஆட்டுத்தலை கதியாவாகஅனுப்பப்பட்டபோ
து அவர் அனுஷவாநிந்தி வென்னைக்காண எனதுஇனைச்சட்டாணிகோ
ம்பஹாஜத்துடையவர்களாயிருக்குமென்று அவரனிலனுப்பினர்.
அவரின்னொருவருக் கனுப்பினர் இப்படியே ஏழுவீடுகட்குத்
முதலின வீட்டைவில் அவ்வாட்டுத்தலை வந்துசேர்ந்தது அப்படியே
ஒரு ஆயத்திறங்கியது அதன்பொருள் அந்தஜனங்களுக்கு எவ்வ
ளவு பசியும் ஹாஜத்து இருந்தபோதிலும் தங்களைக்காண மற்றவர்
களைத் தெரிந்து அவர்களை முற்படுத்துவார்கள் என்று அல்லாகுத்
தஆலா திருவுளமானான் இச்செய்திகள் ஆகுல்பயானிலும், கஷ்பி
ருல் ஹாயிலிலும் வருகின்றது.

## ஹிக்காயத்து.

குதைபத்துல் அதவியென்கிறவர்கள் சொல்லி வருகிறதாவது
என்முடைய சண்டை நடந்தநாளயில்லன் சின்ன பாவாமசனைக்காணு
மலவளைத் தேடிப்படைக்களத்திற் சென்று என்னுடனிருந்தத
ண்ணீரைப் பதனம்பண்ணி அவர் ஹயாத்தாயிருந்தாற் கொடுக்கவே
ணுமென்று வெண்ணிக்கொண்டு தேடித்திரிந்தேன் அப்படியே
அவர் வெட்டுண்டு குறையுயிராய்க் கிடக்கக்கண்டு தண்ணீர்வேண்
டுமாவென்க தன்தலையை யசைத்து வேணுமென்று கைக்கினசெ
ய்தவுடன் அங்கே வேறொருவர் ஆகு ஆகுவென்று சொல்வதைக்
கேட்டு அவருக்குக் கொடுக்கும்படி சொன்னார்கள் அவரண்டைக்குச்
சென்று பார்க்க இவ்வாளென்கின்றவராயிருக்கிறார் அவரிடத்தில்த்
தண்ணீர்வேண்டுமாவென்க ஆமென்றார் அவ்விடத்தில வேறொரு
வர் ஆகுவென்று முனக்க அவருக்குக் கொடுக்கும்படி சொன்னார்
அவராண்டை நான் சென்றபோது அவர் மவுத்தாகிவிட்டார் திரும்ப
மாய் இவ்வாளனிடத்தில் வந்தேன் அவரும்மரணமாகிவிட்டார் அப்பால்

கள் இக்லபாவா மனிடத்தில் வந்தேன் அவருமாணமாகிவிட்டார்
என்றுசொன்னார்கள் இதாகிறது கன்னியாகாரண மற்றவர்களு
மேப் பெரிதாகக் காணுகிறவருமிருன்றும் அதபோருளின்கொ
ண்டு தெரிந்துகொள்கிறதைப்பார்க்கிலும் பெரிதாயிருக்கும் இச்
செய்திகள் அறுல்பயானில்வருகின்றது.

---

## ஊதிது.

---

சகரமென்று மிகையாகிறது அவர்க்கத்தின் மக்களிலொன்
று அதன் கப்புகள் பூமியளவிற் சாய்ந்திடக்கிறது அதினின்று
மொருகப்பைப் பிடிப்பானுகில் அது அவனைச் சுவர்க்கத்தனவி
ற்குத்தவிடும் ஊதிக்கென்னும் அக்கத்தனம் நாகத்திலுள்ள மொரு
மரமாயிருக்கும் அதின் கொப்புகளும் பூமியளவிற் சாய்ந்திடக்கி
றது யாராகிலு மொருவன் அக்கனுயிருந்து அதின் கொப்புகளி
லொன்றைப் பிடிப்பானுகில் அது அவனை நரகத்தளவிற்குக்கொ
ண்டுசேர்க்குமென்று நபிநாயகம் திருவாய்மலர்ந்தருளினார்கள்.

---

## நியாயத்து.

---

பனீ அப்பதில் நின்றுஞ் சிலமனிதர்களைப் பண்டமிற் கொடுத்
து நபிநாயகம் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களிடம் கொண்
டுவரப்பட்டிருந்தது அவர்களில் ஒரு மனிதனைத்தவிர மற்றவர்களை
யெல்லாம் வெட்டும்படி நபிநாயகம் அவர்கள் உத்தாரங்கொடுத்த
போது அவியுள் அற்றமல்லாகுவுக்கு அல்லாவின் றசூலே!
அல்லாருக்கதுவா ஒருவன் மார்க்கமொன்று இந்த ஆளைக்களின்
மீறுகளொன்றுடிப்படிக்கிருக்க இந்த ஒருமனிதனைத் தவிர மற்
றவர்களை வெட்டும்படி புத்திரவுசெய்த காரணமென்னவென்றுகே
ட்டதற்கு நபிநீங் அலைகிவசல்லமவர்க ளென்னிடம் வந்து அந்தம
னிதர்களைவெட்டும்படியாயும் இந்த மனிதனை கொடைபோனுகிலும்



புதால் அவனை விட்டுவிடும்படியாயுஞ் சொன்னார்களென்று நபிநா
யகம் சல்லல்லாகு அலைகிவசல்லம் திருவுளம்பற்றினார்கள். (இவ்
வாம்) கொடையாளனுகிய ஜாகில் பகிலனுகிய ஆலிமைக்காண அல்
லாருக்கதுவா இடத்தில் உவப்பாயிருப்பானென்பியாதிகளிலெல்லாம்
பெரிது பக்கீல்த்தனமாயிருக்குமென்றும் உபகாரத்திற்குப் பாத்திர
மானமனிதனுக்கும் பாத்திரமில்லாத மனிதனுக்கும் உபகாரஞ்செ
ய் உபகாரத்திற்குப் பாத்திரமானவனை நீ பெற்றுக்கொள்ளாவிட்
டாலும் நீ அதற்குப் பாத்திரமானவனுயிருக்குமென்று நபிநாயகம்
சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் திருவுளம்பற்றினார்கள் இச்செ
ய்தி இஹியாவில்வருகின்றது.

---

## ஹிக்காயத்து.

---

நெருப்பை வணங்கிற ஒரு மஜூஸிக்காபிர் ஹலறத்து இப்று
ஹீம் கலீலுல்லாஹி அவர்களிடத்தில் வந்தபோது அவனுக்கு ஒசிப
ஆகொடுத்து அனக்கு இசலாமாகிறதில் வேட்கையுண்டோ என்
றதற்கு அப்பூடைய ஒசிபமை எனக்கு வேண்டியதில்லையென்று
விசனமாய்ப் போய்விட்டான் உடனே அப் இபுறுகீமை அம்மனி
தன் காறப்படு வருடகாலமாய் எனக்கு மாறுசெய்து குபிரிலேயிரு
க்கிறக்க அவனுக்கு நான் றிஸ்குக்கொடுத்து வருகிறேன் நீர் ஒ
ருதடவை ஒசிபனைக் கொடுக்கிறதுகொண்டு அவனை அம்மார்க்கத்
தைவிட்டுத் திருப்ப நாடுகிறீர் என்று அல்லாருக்கதுவா வஹியனு
ப்பினுன் உடனே நபியவர்கள் அவனைத் தேடிப்பார்த்துப் பிடித்து
அச்செய்தியை அவனுக்குச்சொல்லி ஒசிபனந்தில் சமுக்கார்கள்
அதைக்கேட்டு நாம் ஆண்டவனை மறந்து வழிகெட்டவனுயிருந்து
ம் இவ்விதமான உதவிசெய்தால் அந்த நாயனைத்தான் நீட்மைய
க்கொண்டிருந்து வணங்கவேணுமென்று இசலா மார்க்கத்திலாகி
நபியவர்களுடனே வந்து ஒசிபனக்கின்றார் (இன்னும்) ஒரு நாள்
அவர்களிடத்திலே ஒருகாபிர்வா அவனுக்கு ஒசிபனக் கொடுத்த
ஹிப்பினதைப்பற்றி றப்பிடத்தில் மலக்குகள் ஆண்டவனே புறா நு
ம் கொண்டுவது தாரும் உன்பகைக்காருக்கு ஒசிபனக்கொடுக்கிற
து கொண்டு சன்மை செய்தாரென்று கேட்டதற்கு உங்களுக்கா

னை, என் கலீலை நான் மிகவுமறிந்தவனென்று சொல்லி அவர்களி
டத்திற் றிபுரீல் அலைஹிஸ்ஸலாமவர்களை யனுப்பி மலக்குகளுடைய
வார்த்தையைத் தெரிவிக்கும்படி சொன்னதற்கு இபுறாகீம் அலைஹி
ஸ்ஸலாமவர்கள் ஆய் றிபுரீலே நீங்குசெய்கிறவர்கட்கு நீ இருசான்
செய்கிறதால் உன்னிலின்றுந்தான் கொடைகொடுப்பதைப் படித்
தேனென்று அல்லாகுத்த ஆலாவிடம் சொல்லும்படி சொன்னார்
கள் இவ்விதம் அகத்துல் மஜாலிஸில் வருகின்றது.

## ஹதிது.

என் உம்மத்துகளிலுள்ள அப்தாலுகளான அவுலியாக்கள்
தொழுகை நோன்பைக் கொண்டு மட்டும் சுவர்க்கம்புகுதமாட்டார்
கள் என்கிலும் கப்புகளின் ஈகை இரக்கத்தைக் கொண்டும் ஹசது
கெடும்பு முதலியவைகளைவிட்டும் நெஞ்சு சலாமத்தாயிருக்கிறது
கொண்டும் முஸ்லிமானவர்கட்கு உபதேசஞ்செய்கிறது கொண்டு
ம் சொற்கம் புகுதுவார்களென்றும் நபியாகம் திருவாய் மலர்ந்த
ருளினார்கள் (இன்னும்) உன்பேரில் துன்யா முன்னேறுகிறச்சொத்து
களும் சம்பத்துகளும் பெருகிவருகிற நேரத்திலும் நீ செலவுசெய்
அதனாலுன் பொருளழிந்து பறுவாசாது உன்னை விட்டுத் துன்யா
பிற்காட்டிச் சென்றுவந்து கொண்டிருக்கும் போதும் உன் பொரு
ளினின்றும் செலவுசெய் நீகொடுக்காமற் றடுத்து வைத்தாற்போல்
டிருந்தாலு முன்னிடத்தில் அது நிலைத்திறதென்று அலியுன் றெ
ழியல்லாகு அன்கு அவர்கள் சொன்னார்கள்.

## ஹிக்காயத்து.

அவத்தான் ஹாறூன்றசீது இமாம் மாலிக்கு றகிமகுல்லாகு அ
வர்கட்கு அஞ்ஞாறு தங்கக்காசு அனுப்பினசெய்தியை லைதிபுனு
சகது றகிமகுல்லாகு அவர்கள் ஆயிரந்தங்கக்காசை அனுப்பினார்க



ள் அதைக்கலீத்தான் கேள்விப்பட்டு நீ என் குடிகளிலுள்ள மனித
னுயிருந்துகொண்டு நான் ஐந்நூறு காசுகொடுக்க நீ ஆயிரங்காசு
கொடுக்கிறதாச்சுதாவென்று கோபத்துடன் சொன்னதற்கு அமீ
றல் மூமினீனே எனக்கு தினொன்றுக்கு ஆயிரந்தங்கக்காசு வரு
ம்படியிருக்கிறது அவர்களைப்போலொத்த பெரியோர்கட்கு ஒரு
நாள் வரும்படியைக்காணக் குறையக்கொடுக்க எனக்குவெட்கமா
யிருந்ததென்று லைதுறகிமகுல்லாகு சொன்னார்கள். (இன்னும்) அவ
ர்களிடத்தில் ஓர்பெண்பிள்ளை வந்து கொஞ்சம் தேன் வேண்டுமெ
ன்று கேட்டதற்கு ஒருதேன் துருத்தியைக்கொடுக்கும்படி சொன்னார்
கள் அப்போது அங்கிருந்த வொருவர் பெண் பிள்ளைக்கு
இவ்வளவு தேன் தேவையில்லையே என்றபோது அவள் தன் தேவை
யை மட்டுக்கும் கேட்டாள் நாம் நமக்கு அல்லாகுத்த
ஆலா தந்திருக்கிற வாழ்வு நிருமத்தின் கதிர்மட்டும் அவளுக்குக்
கொடுப்போமென்று லைதுறகிமகுல்லாகு சொன்னார்
கள் (இன்னும்) தருமசாலி ஒருநாளொன்றுக்கு மூன்னூற்றறுபது
மிஸ்கீனுக்கு சதக்காக் கொடுக்கிறமட்டுக்கும் யாதொரு பேச்சுப்
பேசுகிறதை நிறுத்திக்கொள்வார்கள்.

## ஹிக்காயத்து.

ஹலறத்து உதுமான் றெலியல்லாகு அன்குவர்கட்கு தல்கா
றெலியல்லாகு அன்கவர்கள் ஐம்பதினாயிரம் திறகம் கொடுக்கவே
ண்டியதிருந்தது. ஒருநாள் உதுமான் றெலியல்லாகு அன்கு அவர்
கள் பள்ளியிற்சென்றபோது தல்கா றெலியல்லாகு அன்கவர்கள்
அவர்களைநோக்கித் தங்களுக்கு நான் தரவேண்டியதுதல் தயார்
ராகயிருக்கின்றது வாங்கிக்கொள்ளுங்களென்க அமீறுல்மூமி
னீன் முறுவுத்தென்று மனிதத்தாத்தின் பேரில் அதுவியாயிருப்ப
தற்காக வுங்களுக்கு அதை கதியாச்செய்துவிட்டேனென்று உது
மான் றெலியல்லாகு அன்கு அவர்கள் சொன்னார்கள் (இன்னும்)
ஒருநாள் ஹலறத்து அலியுன் றெலியல்லாகு அன்கு அவர்கள் வீடு
ளமாயழுதுகொண்டிருந்தார்கள் ஏனழுதீர்களென்று கேட்கப்ப
ட்டதற்கு ஏழுநாளாக என்னிடத்தில் விருந்தாளிகள் வரவில்லை

யதைப்பற்றி யென்னை அல்லாகுத்தஆலா நிந்தித்துவிட்டாரேவென்று பயந்தழுகிறேனென்றார்கள் இச்செய்திகள் இகீயாவில் வருகின்றது.

---

ஹிக்காயத்து.

---

கயாத்துல் ஹையவானென்னும் கித்தாபில் வருகிறதாவது இமாம் அகுமதிபுனு ஹம்பலி றகிமகுல்லாகு அவர்கட்கு இன்னாரூரில் ஒருமனிதரிடத்தில் அனேகியாயமாக சில ஹதீதுகளுண்டாயிருக்கிறதென்று கேள்விப்பட்டு அந்தச்சத்தனவிற்பயணம்புறப்பட்டு அந்த ஊரிடத்தில் சென்றபோது அவர் ஒரு நாய்க்கு ஒசீபனங்கொடுத்துக்கொண்டிருக்கக்கண்டுசலாஞ்சொன்னார்கள் மறுமொழிப்சொல்லிவிட்டு நாய்க்கு ஒசீபனங்கொடுக்கிற அலுவலிலிருந்தார் இமாமவர்கள் நம்முடன் ஒன்றும் பேசவில்லையென்று மனதிலெண்ணினாநேரத்தில் அந்தநாய்க்குத் தீவனங்கொடுத்துத் தீர்ந்தபோது இமாமை நோக்கி நாலுங்கள்பேரின் முன்னோக்காமல் நாயின்பேரில் முன்னோக்கினதைப்பற்றி மனதில் லேசேதனும் எண்ணினீர்களோவென்ன இமாமவர்கள் ஆமென்று சொன்னதற்கு அந்தமனுஷரு பின்னும் சொல்லுகிறாகவென்றால் எனக்கு அபுசனுதென்பவர்கள் அருதக என்பவர்களைத்தொட்டு அவர்கள் அபுகுறைறா றலியல்லாகு அன்கு அவர்களைத்தொட்டு மறிவித்தார்கள் அதென்னவென்றால் ஒருவனிடத்தில் மற்றொருவன் ஒருகாரியத்தை ஆதரவு வைத்துவர அவனுடைய ஆதரவை அந்தமனிதன் முறிப்பானேயில் அம்மனிதன் அல்லாகுத்தஆலாவினின்றும் வைத்திருக்க ஆதரவைக் கியாமநாளில் அல்லாகுத்தஆலா முறித்துவிடுவான் அம்மனிதன் சுவர்க்கம்புகுதவுமாட்டானென்று நபிநாயகம் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் திருவுளம்பற்றியிருக்கிறார்கள் இந்த நாய் இந்த நமது பூமியிலுள்ளதல்ல வேறொரு பூமியினின்றும் என்னை நாடிவந்திருக்க அதின ஆதரவை நான் முறித்து ஒன்றுங்கொடாவிட்டால் அல்லாகுத்தஆலாவினின்றும் நான் கியாமநாளிலாதரவைக்கும் ஆதரவை முறித்துவிடுவானென்று நான் பயப்பட்டேனென்றார்கள் அப்போதிமாம் அவர்கள் நான் இவ்வளவுபாடுபட்டு



வந்ததற்கு இந்த ஒரு ஹதீது யெனக்குப்போதுமென்று சொல்லித் தங்கள் ஊரைநாடிநடந்தார்கள்,

---

ஹிக்காயத்து.

---

ஹலறத்து அப்துல்லாயிபுனு சகுபர் றெலியல்லாகு அன்குமா அவர்கள் தங்கள் தோட்டத்திற்குப்போம்போது பிறல் மனிதருடைய ஈச்சந்தோப்பிலிறங்கியிருந்தார்கள் அங்கே ஓர் கறுப்பரன அப்த்து வேலைசெய்துக்கொண்டிருந்தார் அப்போதவருக்கு மூன்றுறட்டி காலைநேரத்து ஒசீபனத்திற்குக் கொண்டுவந்து கொடுக்கப்பட்டது அதைவாங்கி அங்கிருந்த நாயளவில் ஓர்றுறட்டியை யெறிந்தார் அதையந்த நாய் தின்றவுடன் மறுபடி ஒருறுறட்டியைப்போட்டார் அதையுந்தின்றவுடன் மூன்றாவதுமொரு றுறட்டியைக்கொடுத்தார் அதை அப்துல்லா யிபுனு சகுபர் றெலியல்லாகு அன்குமா அவர்கள் பார்த்துக்கொண்டிருந்துவிட்டு அந்தக் குலாமை யழைத்து ஆய் குலாமே ஒருநாளைக்கி யுமக்கு ஒசீபனம் எம்மாத்திரமென்று கேட்கத் தாங்கள்கண்டீர்களே அவ்வளவுதானென்றார் இந்த நாயை யுன்னபுசைக்கானை ஏற்றமாக யேன்தெரிந்துகொண்டீரென்ன வெகுதூரத்தினின்றும் இந்தநாய்பசியுடன்வந்தது இந்த பூமியில் நாயகள்இடையாது இதைச்சும்மா அனுப்ப எனக்குப் பிரியமில்லை யென்றார் நீர் இன்றைக்குப் பசியாற யென்ன செய்வீரென்று கேட்டதற்கு இன்றைக்குப் பசியாயிருந்துக் கொள்வேனென்றார் அதைக்கேட்டு என்னை யெல்லா ஜனங்களும் சகாவத்தானவனென்று புகழ்கின்றார்களே யிந்த அப்து என்னைக்காணப் பெரிய சகியென்னுந் தர்மவானாயிருக்கிறானென்று அப்துல்லா றெலியல்லாகு அன்குசொல்லி யந்த ஈத்தந்தோப்பையும் அதிலுள்ள சாமான்களையும் அந்த அப்பத்தையும் அவர்கள் வாங்கி அவனை யுரிமைவிட்டு அந்தத்தோப்பையுஞ் சாமான்களையும் அவருக்கே கொடுத்து விட்டார்கள் இவ்விதம் றிசாலத்தில் குசைறியிலும் கயாத்துல் கயவானிலும் வருகின்றது.

---

## ஹதீது.

சதகாவில் நின்றும் வரு திருகம் லட்சம் திருகத்தைக்காண அல்லாகுத்தாலாவிடத்தி லேற்றமாயிருக்குமென்று நபிசல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் திருவுளமானபோது அசுகாபுகள் நபிநாயகமவர்களை நோக்கி அல்லாவின் சங்கையான நபியே அதின்விதமெப்படியென்று கேட்டதற்கு ஒருமனிதனுக்கு அனேகபொருள்களும் திரவியங்களுமுண்டாயிருந்தன, அத்திரவியத்திலிருந்து லட்சந்திருகத்தையெடுத்து சதக்காசெய்தான் மற்றொருவன் தன்னிடத்திலிருந்த விரண்டே திருகத்தைத் தவிர வேறுபொருளில்லாதிருந்தும் அவ்விரண்டு திருகத்தில் ஒரு திருகத்தையெடுத்து தன் அல்பு மனமாய் இகுலாசுடன் சதக்காச்செய்வானாகில் இந்த வொருதிருகங் கொடுத்தவன் அந்த லட்சந்திருகங்கொடுத்தவனைக் காண வேற்றமாயிருக்குமென்று நபிநாயகம் திருவுளம்பற்றினார்கள் இனித் தன் காசத்துக்கு போதுமான பொருள்களை வைத்துக்கொண்டு மீதத்தையெல்லாம் அல்லாவின் பாதையில் செலவு செய்கிறதுவேண்டுமாகும் பின்னர் பொருளைத் தங்கரிகஞ் செய்கிறது மூன்றுதரஜாவாயிருக்கும் அவற்றுள் (முதலாவது) இராப்பகலாகிய வொருநாளைக்குப் போதுமானதை மாத்திரம் வைத்துக்கொள்கிறது இது சித்தீக்கீன்களுடைய தரஜா (இரண்டாவது) நாற்பது நாளைக்குக் காணும்படியான பொருளை மாத்திரம் வைத்துக்கொள்கிறது இது முத்தகீன்களுடைய தரஜா (மூன்றாவது) ஒருவருஷத்திற்குப் போதுமான பொருளை வைத்துக்கொள்கிறது இது அல்பு பலவீனமான சாலிகானவர்களின் தரஜா இதைப்பார்க்கிலும் மேலிட்ட பொருளை தங்கரிகஞ்செய்தவன் காசான மாத்தபாவைவிட்டு நீங்கி ஆம் கல்க்குகளிற் சேர்ந்தவனாயிருக்கும் நபிசல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் தங்கள் பீவிமார்களிற் சிலருக்கு ஒருவருஷத்து ஒசீபனத்தையும் சிலருக்கு நாற்பதுநாள் ஒசீபனத்தையும் சிலருக்கு ஒருநாளிரப்பகல் ஒசீபனத்தையும் அவரவர்கள் தாம்போல் கொடுக்கிறவர்களாயிருந்தார்கள் இராப்பகலாகிய வொரு நாள்ஒசீபனத்தை யெந்த பீவிக்கு கொடுத்தார்களென்றால் ஆயிசா நாயகி கப்சா நாயகி றெலியல்லாகு அன்கு மாவிவர்களுக்காயிருக்கும் இவ்விதம் இகுயா நான்காவது பாகம் 160-வது பக்கத்தில் வருகின்றது.



## ஹிக்காயத்து.

சாலிகானவர்களிலொருவர் தங்கள் சிநேகிதருடைய சக்கறாத்து வேளையில் காவிராயிருந்தார்கள் அப்போது இராக்காலமாயிருந்தபடியால் அங்கே விளக்கெரிந்து கொண்டிருந்தது அவர்கள் ரூகுறப்பிடஞ்சென்று மரணமானபோது அவருக்கருகேயிருந்தவிளக்கை உடனே நூர்த்தார்கள் அதைக்கண்ட ஜனங்களெல்லாம் விளக்கை நூர்க்கவேண்டிய காரணமென்னவென்று கேட்டதற்கு இவர் கயாத்தாயிருக்கும்போது விளக்கும் வீடும் பொருளும் சொத்தும் அவருடையதாயிருந்தது அவர் எப்போது மரணமாகிவிட்டாரோ அப்பவே அவர் பொருளென்கிறதைவிட்டு நீங்கி அவர் சொத்துகளுக்குப் பாத்தியஸ்தர்களான அநந்தரகாரர்களின் ஆஸ்தியாய்விட்டது விளக்கு எண்ணெ அநந்தரக்காரர்களின் ஆஸ்தியாயிருப்பதால் அவர்களுக்குத்தரவன்றி விளக்கெரிகிறதென்று அவித்தேன் அவர்களுத்தரவு செய்தால் விளக்கைப்பற்றிக் கொள்ளுங்களென்று சொன்னார்கள் இவ்விதம் துருருல் ஆபிதீனில், வருகின்றது. ஆதலால் ஆய் எனது இதவான்களே உங்கள் மவுத்து வந்தபோது எல்லாப்பொருள்களும் சொத்துகளும் உங்களை விட்டு நீங்கி அநந்தரக்காரர்களுக்காகு முன் உங்கள் கயாத்திலேயே நல்லவழியிற் செலவு செய்து நலத்தைத் தேடி லாபத்தைப்பெற்றுக் கொள்ளுங்கள் நீங்கள் மரணமானபின் உங்கள் பிள்ளை அண்ணன் தம்பிமுதலான அநந்தரக்காரர்கள் நல்வழியிற் செலவுசெய்து உங்களுக்கு நலத்தைத் தேடுவார்களென்று உங்களுக்கென்ன நம்பிக்கை எத்தனையோ நல்ல மனிதர் சம்பாதித்த பொருளை கெட்டவழியிற் செலவுசெய்து பெயரைக் கெடுக்கிறதை நீங்கள் பார்க்கவில்லையா நல்லவாயன் தேடி நாறவாயன் தின்கிறதென்ற பழமொழியையாவது கேட்கவில்லையா, உங்கள் தெளிவான புத்தியா லாராய்ந்து நற்கதியை நம்பி நல்வழியிற் செலவுசெய்து நற்கூலியைப் பெற்றுக் கொள்வீர்களாக.

## ஸாலிகான யேழைகளுக்கு கிடைக்கிற நன்மையின் விபரம்.

### ஹதீது.

---

ஆய் எஸ் அசுகாபுகளில் பக்கிரென்னும் யேழைகளான கூட்டங்களே உங்களுக்கு நான் நல்மாராயஞ் சொல்லுகிறேன் அதாவது மூமின்களில் யெளியோர்கள் கியாமநாளில் சீமான்களுக்குப் பாதி நாளென்னும் ஐந்நூறு வருடத்திற்கு முன் சுவர்க்கம் புகுவார்களென்று நபிநாயகம் அவர்கள் திருவுளம்பற்றியதாய் இபுனு உமறு றலியல்லாகு அன்குமா அவர்களைத் தொட்டும் இபுனு மாச்சா ரிவாயத்துப் பேசிவந்தார்கள் (இன்னும்) மூமின்களில் எளியோர்களுக்குக் கியாமநாளில் செயம்பெறுதலைக்கொண்டு நல்மாராயஞ் சொல்லப்படவும் நன்மாராய மென்னவென்றால் எளியோர்கள் மூமினான சீமான்களைக்காண ஐந்நூறு வருடத்திற்கு முன்சுவர்க்கம்புகுந்து அங்குள்ள அன்னபான முதலான நிருமத்துகளைக்கொண்டு மகிழ்ச்சிகூர்ந்து வாழ்வார்கள் இவ்வுலகில் சீமானாயிருந்து கெம்பீரங் கொண்டாடின ஜனங்களெல்லாம் மகுஷர் வெளியிற் கேள்வி கணக்குகளுக்கு உத்தாரஞ்சொல்லுகிற அலுவலிலா யிருப்பார்களென்றும் இவ்வுலகில் சலிப்பு நீளமாய்ப் பசி பதிகமாயிருந்த ஜனங்கள் ஆகிறத்தில் சந்தோஷ நீளமாய்ப் பசிதீறுத லதிகமாயிருப்பார்களென்றும் இந்த துன்யாவுக்கு அல்லாகுத்தஆலா இடத்தில் ஒரு விலையுமில்லை அது கொசுகின் ஒரிறகுக்காவது சமானமாயிருக்குமாகில் அல்லாகுத்தஆலாவுக்கு மாறுசெய்த கெட்ட காபிர்களுக்கு ஒரு மிடக்குத் தண்ணீரையாவது அல்லாகுத்தஆலா கொடுக்க மாட்டானென்றும் உலகாட்சனாகிய நபிசல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் திருவுளம்பற்றினார்கள்,

---



### ரிவாயத்து.

---

ஹஸறத்து அபூகுறைறா றலியல்லாகு அன்கு அவர்களைத் தொட்டும் றூசிவிமென்கிற இமாம் பேசி வருகிறதாவது ஒருநாள் நபிநாயகம் நபிசல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் தங்கள்வீட்டை விட்டும் வெளியே வரும்போது அபுபக்கர் உமறு றலியல்லாகு அன்குமா இரண்டுபேர்களையுங்கண்டு நீங்கள் வெளியேவந்த காரணமென்னவென்க பசியினாலென்றார்கள் நாயகம் அவர்களு நானுமப்படியே யென்றுசொல்லி நடந்து அன்சாரீன்களிலொருவர் வீட்டுக்குவர அவரங்கில்லை அவரின் மனைவி இடத்தில் இன்னாரெங்கேயென்க மதுசபாவென்னைச் சொல்லிப் போற்றி என் கணவனார் தண்ணீர் கொண்டுவரப்போனாரென்றாள் அப்பொழுது அவரும் வந்தார் நபிநாயகம் அவர்களையும் மற்ற இரண்டுதோழர்களாகிய அபுபக்கர் உமறையும் பார்த்தவுடன் அல்கம்துலில்லாவென்று ஆண்டவனைப்புகழ்ந்து இன்றையதினம் உங்களைக்காண விருந்தாளிகளாற் சங்கையானவன் யாருமில்லையென்று சொல்லி முன்னுவிதமான கனிகளுள்ள ஈச்சங்குலையைக்கொண்டுவந்து கொடுத்துப் புசிக்கும்படி செய்துவிட்டுக் கத்தியையெடுத்து வெள்ளாட்டை யறுக்க நாடினபோது அவரைநோக்கிப் பாலாட்டை யறுக்கவேண்டாமென்று நபிநாயகம் சொன்னார்கள் அப்பால் பாலில்லாத ஆட்டையறுத்து இறைச்சியைப் பகுவமாய்ப்பொரித்துக் கொண்டுவந்து கொடுத்தார் அவைகளைப் புசித்துத் தண்ணீர்குடித்துப் பசியாறித் தாகந்தீர்ந்தபின் இரண்டு தோழமையு நோக்கி சத்தியமாய் கியாமநாளிலுங்களை இந்த நிருமத்தைக்குறித்துக் கேட்கப்படும் நீங்கள் வீட்டைவிட்டும் பசியாய் வந்தீர்கள் இந்த நிருமத்தைப்பெற்றவர்களாய் மீளுகிறீர்களென்று நபிநாயகம் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் திருவுளம்பற்றினார்கள்,

---

### ரிவாயத்து.

---

ஹஸறத்து ஜிபுரீல் அலைகிஸ்ஸலாமவர்கள் ஒருநாள் நபிசல்லல்லாகு அலைகிவசல்லமவர்களிடம் வந்து அல்லாகுத்தஆலா வுங்க

ருக்கு சகாத்தெசால்லி இன்னுள்ள மக்களைத் தக்கமாக்கி நீங்களெக்க இடஞ்சென்று புருஷனுடன் அதையாக்கி விடுகிறேனென்றும் அப்படிச் செய்யத் தங்களுக்குப் பிரியமாவென்றும் அல்லாகுத்ஆலா கேட்கிறானென்று சொல்ல நபியவர்கள் சற்றே அவைகளிற் கிருந்துவிட்டு பெரிட்டுப்பார்த்து ஆயிஷாவே இந்தத் துன்யா ஆகிறத்தில் வீடில்லாதவனுக்கு வீடும் பொருளில்லாதவனுக்குப் பொருளுமாயிருக்கும் புத்தியில்லாதவனதைச் சேகரித்துத் திரட்டிவைப்பானென்றார்கள். உடனே ஜிபுரீல் அலைகிஸ்ஸலாம் நபியவர்களை நோக்கி ஆய் முகம்மது நபியே அல்லாகுத்தஆலா இப்படிச் சொத்த துன்பாடான வாக்கைக்கொண்டு உங்களைத் தரிபடுத்தி வைப்பானாக வென்று சொன்னார்கள்.

---

## நசீகத்து.

---

ஆய் ஜனங்களே உங்கள் வுக்கிப்படிக்கி நபியவர்கள் ஏழையாகவாயிருந்தார்கள் ரொம்ப மிஸ்கீன் ஆயிருந்தார்களென்று பேசாதீர்கள் அவர்கட்கு எல்லாப்பாக்கியத்தையும் ஆண்டவன் கொடுத்திருக்க ஏகுதென்னும் துன்யா வெறுப்பை வெளியாக்கி யும்மத்துகளுக்கு எகுதென்னும் பக்தியையும் துன்யா வெறுப்பையும் படித்துக் கொடுப்பதற்காகவே பொழுதிய மற்றப்படி வேலையைத் தனக்குக்காகவும் பெருமைத்தனத்துக் காகவுமல்ல இதற்காகத்தான் சிலபுக்ககாரர்கள் சொல்லுகிறார்கள் நபியவர்கள் பணத்தின் விஷயத்தைப் பற்றிப் பக்கிருகீ இருக்கவில்லையென்கிலும் அல்லாகுத்தஆலாவின் அனுமதிகொண்டு எல்லா ஜனங்களிலும் பெரிய சீமானாக இருந்தார்கள் ஆனால் ஆண்டவனே என்னை மிஸ்கீனாக ஹயாத்தாக்கி வையென்று அவர்கள் சொல்லித் துஆச்செய்ததின் பொருள் கல்பு ஒடுங்கி பொருமித்திருக்கும்படி என்னை ஹயாத்தாக்கிவை யென்கிற பொருளே பொழுதிய மிடிமையானது யென்னை ஹயாத்தாக்கிவை யென்கிறதல்ல ஏனென்றால் மிஸ்கீனென்கிற சொல்லுக்கு அவ்விதம் இரண்டருத்த முண்டாயிருக்கிறும் இவ்விடத்தி லந்த கல்பு ஒடுங்கி பொருமித்தவென்ற அருத்தமே தவிற இந்த மிடிமையென்ற அருத்த முறுதல்ல மேலும் மிடிமைத்தனத்



தின் பித்துனத்தை விட்டும் சேமன் தனத்தின் பித்துனத்தை விட்டும் அபிகாயகம அவர்கள் காமானத் தேடினதாய் சகியாய் வந்திருக்கிறது (இன்னும்) உத்துலலம் தேசத்து புக்ககாரர்கள் நபியவர்களை ஏழைமைத் தனத்தைக்கொண்டே பக்கிறென்று மிடிமைத்தனத்தைக்கொண்டும் வஸ்ஸித்தவனை வெட்டுகிறதுகொண்டுத்தூவாக்கெகொத்திருக்கிறர்கள்.

இவ்விதம் புதுஹாத்தால் அருமதிய்யா 56 வது பக்கத்தில் வருகின்றது (இன்னும்) ஹலறத்து ஈசா அலைகிஸ்ஸலாமவர்களை ஏகூதிகள் அழிவிட்டுக் கொல்ல யத்தனிக்க சோம் அறையிலிருந்து போது அவர்களைத் தேடிப்பார்க்கப்போன மனிதனை ரூபமாற்றப்பட்டு அவனையே கழுவிற்போடப்பட்டது சையிதினா ஈசா அலைகிஸ்ஸலாமை அல்லாகுத்தஆலா பாதுகாத்து ஆகாயத்து வானத்து உயர்த்தப்பட்டபோது அங்கிருந்த மலக்குகள் இவர்களைக் கண்டு பார்த்துப் பெறவந்து அவர்கள் அணிந்திருக்க கமீசை மலக்குகள் உடனிக் கொடுத்தார்கள். அந்த கமீஸில் மூன்றாறு துண்டு ஒட்டுப்போட்டுத் தைத்திருந்ததைக்கண்டு மலக்குகள் ஆழுதுயா இலாஹி இந்த ஈசா துன்யா அடங்கலிலும் சரியான ஒரு கமீசுக்கு பெறுதுடையவர்களா யிருக்கவில்லையா வென்று கேட்க ஆய் மலக்குகளே அவரை இன்னும் நன்றாய்ப் பரிசோதித்து அவருடைய அணியாகிலும் வேறே பெதெனு முண்டோவென்று பாருங்களென அல்லாகுத்தஆலா அறிவிக்க மலக்குகள் சோதித்ததில் ஈசா அலைகிஸ்ஸலாமவர்களுடனே ஒரு ஊசியுமுண்டாயிருந்தது அப்போது இவருடனே இந்த ஊசி யுண்டாயிருக்கட்டால் அவரை நாலாவானத்தி லிறக்குமாட்டேன் இன்னும் மூயர்த்தியானதானத்தானிலுயர்த்தி விடுவேனென்று அல்லாகுத்தஆலா அருளிச் செய்தான் இவ்விதம் றவுனக்குல் மஜாலிசென்னும் கிதாபில் வருகின்றது. (ஆதலின்) எந்த நபிமார்களாயினும் நிந்திக்கிறது குபிராயிருக்கின்றது சந்தேகமில்லையின்று.

---

## ஹிக்காயத்து.

---

இபுனு கிபீபுனா அப்துற்றகுமான் றஹிமகுல்லாகு அவர்கள் சொன்னாயிருந்து சொன்புதிறக்கும் வேளையில அவர்கட்கு ஒரு

[illegible]கொண்டுவந்து வைக்கப்பட்டபோது மகாஞானி உண்டு என்னேசுக்கரண கைகுனவர்களாயிருந்தார்கள் அவர்களை மரணமான போது பயன்செய்யத்துணியவில்லை ஒருபோதும் ஆனிமாத்திரமுண்டாயிருந்தது அதைக்கொண்டு நல்லவர்களுடைய காவித்தியும் காலமானமுடிவுகல் தகெரியும் இவ்விதமான விதிதியில்லிருந்தார்களென்னைக்குத் துன்யாவினின்றும் இன்னும் இன்னதென்றாக கொடுக்கப்பட்டிருக்கிறது நம்முடைய கன்மையின்கனிவை இவ்வுலகத்தொடுக்கப்பட்டதொவென்று பயப்படுகிறவர்கள்சொல்லி வியாகூலமாயழுத்துணர்த்தார்கள் கடாசி ஆகக ஒசிபனத்தைத தொடவில்லை இச்செய்திகள் இருசாகல் இயாகிலும் மனுஷிகனர் சினிதமை வருகின்றது.

---

## ஒக்காயத்து.

---

குபிஅத்தல் அகவிய்யா தெவியல்லாகு அன்சா அவர்கள் ஒருகிழமையவரை சோன்புநிறக்க யாதொரு வஸ்துவையும் பெற்றுக்கொள்ளவில்லை எட்டாநாளிலென்று பேசுமையும் பெலகீனமாயிவர்கள நபுசசப்தமிட்டு பென்னே பெய்மாத்திர சேவிக்கிறசெய்வாயென்று முறைப்பாடு செய்துக்கொண்டிருந்தது அக்கேரம நூறுவர் ஒருபாசனில் ஒசிபனங்கொண்டுவந்து கொடுத்தார் உடனே விளக்கேற்ற பெழும்பிப்போய் விக்கனங்கொண்டுவருவதற்குள்ளாகப் பூனைவந்து ஒசிபனத்தைத்தள்ளிக் கொட்டிவிட்டது தண்ணீர்க்கூசாவை யெடுத்துக்கொண்டு வாய்போனபோது விளக்கு நூர்ந்துவிட்டது தண்ணீர் குடிக்கநாடினபோது கையிலிருந்தவிரிக் கூசாவிழுந்துடைந்துவிட்டது உடனே அவர்களின் இயாதத்துகாணுக் கீப்பிடித்துவெந்துபோகிறதைப் பயப்படும்படி ஆருஏன்று ஓர் சப்தமிட்டு இலாஹியேன் கேடடைந்தாருகின்ற காயனே இந்தப் பெலங்கெட்ட பிள்ளைனை பெண்பிள்ளையை ஏதுசெய்கிறுவென்று வியாகுலமாய்ச் சொல்லிப் புலம்பினர்கள் அதுடனே யாகுபிஅ அபியாவென்றும் பெண்பிள்ளையே நீ இவ்வுலகின் கிருபத்திதன்னைச் சொருகைபும் வாழ்க்கையையும் நாடினவளிருந்தாலத்தியனக்குத்தந்து நம்மிளிவாமுனைக்குக்கிடைக்க மதுத்தப



மையும் நம்முடைய காட்டத்தையும் உன்னைவிட்டும் பிடுங்கிக்கொண்டோம் துன்யாவிலிருக்கத்து நம்முடைய காட்டும் பொறுமையுமேசார்ந்திருந்து குபிஅவே யுனக்கொரு முறைதென்றுநோக்கமிருக்கிறது எனக்கொரு முறையிருக்கிறது வீணேனுக்கமும் என்னேனுக்கமும் பொருந்துமைப்படாதென்று சொர்சப்தங்கேட்டது அவ்வசரீரி வாக்கையறிபிஅ கேட்டவுடன் தன்னிருதயத்தைத் துன்யாவைவிட்டும் நுறித்து இத்தொழுகைக்குப் பின் நமக்கு வேறே தொழுகை முதலிய வணக்கமுண்டாகமாட்டாது இதுவே முடிவான பயணத்தொழுகையென்று நிச்சயித்து கல்க்குகள் என்னிடத்திலவந்து உன்னைவிட்டு மென்னைத் திருப்பாமலிருக்கும்படி யவர்களை புன்னைக்கொண்டே பார்க்காக்கினையென்றுசொல்லி கல்க்குகளின்பேரில் நாலுதக்குபீர் சொன்னார்கள் இவ்விதம் முறைசிது தல்ஸாப்பென்னுங் கிதாப்பில் வருகின்றது.

---

## றிவாகாயத்து.

---

ஊலஹத்து நபிசாயம் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் நிருவுசம்பந்தியதாய் காணாயுசனால் பசிநகிமருல்லாகு அவர்கள் பேசிவருகிறதாவது இவ்வுலகின்கண் தரித்திரனாயிருந்து அல்லாகுத்தஆலாவை மறக்காமல் துக்குவாச்செய்து வணங்கின பக்கீருகிய அப்துதைக் கியாமத்தில் அல்லாகுத்தஆலாவின் சந்நிதானத்திற்கொண்டுவரப்படும் அப்போது அல்லா சுபுகானகுத்தஆலா அமனிதனுக்கு என் வஅப்பத்தின்பேரிலும் சிறப்பின்பேரிலும் சத்தியமாக ஆய் இன்றுனே நீ என்னிடத்தில் தாழ்மையாயிருப்பதற்காக வுன்னைவிட்டுத் துன்யாவைத் தூரப்படுத்தவில்லை என்கிலும் உனக்காக இவ்விடத்தில் நான் தயாரிய செய்துவைத்திருக்கிற மேன்மைக்காகவும் சங்கைக்காகவும் பாக்கியத்திற்காகவும் நான் துன்யாவென்னும் பிரபஞ்ச வாழ்வுகளையும் அதன்சுகங்களையும் உன்னைவிட்டும் அப்புறப்படுத்தினேன் இதோ இருக்கின்ற சப்புகளென்னும் அணிகளைக்கிழிசென்று வுனக்கொருவன் அன்னம் ஆடைமுதலானவைகளை யென்னை நாடித் தந்திருப்பானகில் அவன் கையைப் பிடித்துக்கொண்டுபோ அவன் உனக்காக யிருக்குமென்று அல்லா

குத்தஆலா சமாதானத்தைச் சொல்வான் அக்காலின் மற்ற மனிதர்களையெல்லாம் வேர்வையால் வாய்வரை மூடப்பட்டிருக்கும் ஆண்டவன் அந்த மனிதனுக்கு அவ்வுத்திரவு கொடுத்தவுடன் அவனிகளை நீக்கி நீக்கிச்சென்று தனக்கு சவுனவன் உபகாரஞ் செய்தாரோ அவனையெல்லாம் பார்த்துக் கையைப்பிடித்து சுவர்க்கலோகத்துக்குக் கொண்டுபோவான் இவ்விதம் இருசாதால் இபாதென்னுங் கித்தாபில் வருகின்றது,

ஹிக்காயத்து.

ஹஸரத்து அப்த்துற்றகுமானிபுனு அவுபின் றெளியல்லாகு அன்கு அவர்களுக்கு சமன் ராச்சியத்தில் வியாபாரங் கொண்டுபோன ஒட்டகங்களும் ஒட்டகைகளும் அங்கிருந்து சரக்கேற்றிவந்தபோது மதினமாநகரத்தில் ஒரே சப்தமாக இரைச்சலாகி விட்டது அதை ஆயிசா றெளியல்லாகு அன்கா அவர்கள் கேட்டு இதென்ன இரைச்சலென்க அப்துற்றகுமானுக்கு சமனிலிருந்து வந்த சரக்கேற்றிய ஒட்டகைகளும் அதன் அதின் ஆட்பேர்களும் வந்த காரணத்தைப் பற்றி யுண்டான இரைச்சலென்று சொல்லப்பட்டதற்கு அல்லாகுத்தஆலாவும் அவனுடைய றசூல் நபிசல்லல்லாகு அலைகிவசல்லமவர்களும் உண்மைசொன்னார்களென்று ஆயிசாநாயகி சொன்னார்கள் அதுசெய்தி அப்துற்றகுமானிபுனு அவுபுக்கு தெரிந்தவுடனே அம்மா அவர்களிடத்தில் வந்து அதை விசாரித்ததற்கு நான் சொற்கத்தைப்பார்த்தேன் அங்கே மக்கத்தைவிட்டும் மதினாவுக்குச்சென்ற முகாசிரீன்களுடைய புக்கறாக்களென்னும் யெளியோர்களையும் சில முசிலிமீன்களையும் ஓடிப்போய்ச் செல்லக்கண்டேன் அவர்களுடனே சீமான்களிலொருவனாவது அந்த சுவர்க்கம்புகுத நான்காணவில்லை அப்துற்றகுமானிபுனு அவுபு மாத்திரம் புக்கறாக்களுடனே தவழ்ந்து தவழ்ந்து சொர்க்கஞ் செல்லக்கண்டேனென்று நபிசல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் சொன்னதை நான் கேட்டிருக்கிறேனென்று ஆயிசா றெளியல்லாகு அன்கா அவர்கள் சொன்னார்கள் அதையவர்கள் கேட்டவுடனே அவ்வொட்டகங்களும் மதினத்திலிருக்கிற சாக்கு



கையும் சாமான்களும் பீசபீலென்னும் தக்காரமாயிருக்கும்படி என்னுடைய அப்த்துகளை யெல்லாம் அல்லாவுக்காக உரிமைவிட்டேன் நான் புக்கறாக்களுடன் சுவர்க்கத்திற்கு வோடிச்செல்லவென்று அப்துற்றகுமானிபுனு அவுபு றெளியல்லாகு அன்கு அவர்கள்சொன்னார்கள்.

ஹிக்காயத்து.

ஹஸரத்து அபூபக்கர் சித்தீக்கு றெளியல்லாகு அன்கு அவர்கள் ஒருதடவை தாகமாயிருந்தார்கள். அப்போது தண்ணீருந் தேனும் அவர்கட்குக் கொடுக்கப்பட்டது அதைக் குடித்தவுடன் மிகவும் ஏங்கி யேங்கி யழுதார்கள் அதைக்கண்ட மற்றோர்களு மழுத் தணித்தார்கள் அப்பால் தங்கள் சங்கையான முகத்தை விட்டுக் கண்ணீரைத் துடைத்தார்கள் மறுபடியு மிகுதமாக அழுதபோது இவ்வளவு அழுகை இந்தக் குடிப்பினாலோவென்று கேட்கப்பட்டதற்கு ஆமென்று சொல்லி இதற்கு முன்னொரு நாள் நான் நபிநாயகம் அவர்களிடமிருந்தேன் அப்போது வீட்டிலவர்களுடனென்னைத்தவிர வேறே யாருமில்லை தங்களைவிட்டு யொருவரைத்தட்டுகிறது போல் தட்டித் தள்ளுகிறவர்களாயிருந்து என்னைவிட்டுத் தூரப்போவென்று நாயகஞ் சொல்லிக்கொண்டிருந்தார்கள் அப்போது அவர்களை நோக்கி என் அன்னை பிதாவைத் தங்களுக்காக சதக்காக்கொடுத்துவிட்டேன் தங்கள் திருமுன்பி லொருவருமில்லையே யாருடனே வார்த்தை பேசுகிறீர்கள் யாரைவிரட்டுகிறீர்களென்று கேட்டதற்கு இந்தத் துனியாவானது என் முன்பில் வந்து தன்தலையையுங் கழுத்தையு நீட்டி முகம்மது நபியே என்னைப் பிடித்துக்கொள்ளுங்களென்று சொன்னது அதற்காக என்னைவிட்டுத் தூரப்போவென்று சொன்னதைக்கேட்டு நீங்க ளென்னைவிட்டு நீங்கி ஈடேற்றம்பெற்றாலும் உங்களுக்குப் பின்னுள்ளவர்க ளென்னைவிட்டும் ஈடேற்றம் பெறமாட்டார்களென்று அந்த துனியா சொன்னதாக நபிநாயகம் சொன்னார்கள்.

அதனால் காலிப்போல குடிக்க குடிப்பு என்னை நபிநாயகம் அவர்களை விட்டுப் பிரிக்கிறதற்காக பெண்களுக்கிடைத்திருக்குமோ வெனப் பயப்பட்டு அழுதேனென்று சொன்னார்கள் (ஆய்) காதுமுகளே இவ்விதமான அதிகாரபுகழ் பெரியோர்கள் ஏற்றமானவர்களான காதாக்களெல்லாம் நல்லான குடிப்பைக் குடித்ததைப் பற்றி நபிநாயகமவர்களை விட்டு நாமே பிரிந்து விடுவோமோ வென்று பயந்து அஞ்சி பழுதார்களே நீங்கள் ஹலாலென்றும் ஹறாமென்றும் பாராமல் சந்தேகமான பொருள்களினின்றும் ஹறாமினின்றும்செறுக் கொண்டாடுகுறீர்கள் நபியவர்க ளுங்களை வெறுக்கிறதை யறுக்குறீர்களில்லை கடுகேச உனக்கெனனகேடு உன மடத்தனத்தை வெதுல்லது விருப்பமாக்கிவைத்துவிட்டது நபியவர்களைவிட்டு நீயின தாங்கிறைல் மலக்குகள் நபிமார்களெல்லாம் அஞ்சும்படியான அமளிகளைக் கியாமத்திற் காண்பாய் கொடுசநதைக்கொண்டு இதுஅநதச் செய்யாவிட்டாற் பெரிய துன்பத்திலாகி விடுவாய் அப்படியாராமல் போகசையைவிட்டுப் பயந்து நட.

---

## ஹிக்காயத்து.

---

ஒருநாள் நபிநாயகம் சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களின் அருமை மகளாகிய பாத்திமா நாயகி றலியல்லாகு அன்கா அவர்களை விசாரிக்க நபியவர்கள் போனபோது இம்றானென்பவர்களையுங் கூட அழைத்துக்கொண்டுபோய் பாத்திமா றலியல்லாகு அன்கா அவர்களின் வீட்டு வாயில் நபியவர்கள் நின்று அஸ்ஸலாமு அலைக்கும் நானுங்களிடம் வரலாமா வென்று கேட்டபோது அலவருடைய றெருதேஷ வருக்கவென்று மகளார்சொல்ல என்னுடன் இம்றானும் வந்திருக்கிறார் அவரும் வரலாமாவென்க சத்தியமாக என்பேரில் ஒரு துணியே பொழிய வேறில்லை யென்றார்கள். அப்போது தங்கள் மேல் வேட்டியைக் கொடுத்து இதைக்கொண்டுங்கள் அரையைக் கட்டி முகமூடி போட்டு மூடிக்கொள்ளுங்க வென்று சொல்ல அதை வாங்கி அப்படியே செய்துகொண்டபின் இருவரும் வீட்டினுள் வரும்படி உத்திரவு கொடுத்தார்கள் நபியவர்கள் வீட்டுக்குள்ளே சென்றபோது சலாஞ்சொல்லி என்மகளே உன்



காரியமெப்படி யென்ன செய்கிறீர்களென்று கேட்டதற்கு வருத்தப்பட்டவளாகவும் அல்லாவினுடை பசித்தவளாகவும் உண்ண ஒசியமில்லாதவளாகவும் இருக்கிறேனென்க நபிநாயகம் அவர்கள் அழுது மகளே திடுக்கப்படவேண்டாம் நானு மூன்று நாளாய்ப் புசிப்பன்றி இருக்கின்றேன் உன்னைக்காண நான் அல்லாவிடத்திற் சங்கை பெற்றிருந்தும் இப்படியா யிருக்கின்றேன் நானும் என் றப்பிடத்தி லெதைக் கேட்டாலுங் தருவான் எனினும் துன்யாவைக்காண ஆகிறத்தைத் தெரிந்து கொண்டேனெனச் சொல்லி பிள்ளையவர்களின தோளில் தங்கள் திருகையைக் கொண்டு தட்டி நீஙன் மாராயம் பெற்றுக்கொள் அல்லாவின்பேரில் சத்தியமாக உண்மையாக நீ சுவர்க்கம் புகுதுகிற பெண்பிள்ளைகளுக்கெல்லா நாயகியாயிருக்கு மென்றார்கள்.

அதைக்கேட்டு ஆசியா மறியமெங்கே அவர்களுக்கென்ன மறாத்தபா வென்க ஆசியா தன் காலமென்னும் ஆலத்துப்பெண்பிள்ளைகளுக்கெல்லா நாயகி மறியம் தன் ஆலத்துப்பெண் பிள்ளைகளுக்கெல்லா நாயகி கதீஜா தன் ஆலத்துப் பெண்பிள்ளைகளுக் கெல்லா நாயகி நீயுன் ஆலத்துப் பெண்பிள்ளைகளுக்கெல்லா நாயகியாயிருக்கும் கோவின இல்லாத மூங்கில் வீட்டுகளிலும் குடியிருப்போமெனச் சொல்லி மகளே நீயுன் புருஷனைப் பேணியுள்ளதைக் கொண்டு இறையைத்துச்செய் துன்யாவிலும் ஆகிறத்திலும் நாயகமானவருக்கு வுன்னை நான் கலியாணஞ் செய்து கொடுத்திருக்கிறேனென்று மகளை நோக்கி நபிநாயகம் சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்கள் திருவுளம் பற்றினார்கள் (ஆதலால்) நபிசல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களின் சங்கையான அருமைமகளின் காரிய மிப்படியா யிருக்கிறது அவர்கள் பணக்காரர்களை விட்டு நீங்கி பக்றென்னும் தரித்திரத்தைத் தெரிந்து கொண்டார்கள் இதை யுற்றுணர்ந்து பாருங்கள். நபிமார்கள் ஒலிமார்கள் சரித்திரங்களையும் சொற்களையும் விசாரித்து உற்றுணர்ந்து பார்த்தவன் துன்யாவின் சம்பத்திலிருக்கிறதைவிட இல்லாமற் போகிறது நலமென்று நாடுவான் இச்செய்திகள் இகியாவில் வருகின்றது.

---

## ஹிக்காயத்து.

காபிரீன்களிற் சில தலைவமார்கள் நபிசல்லல்லாகு அலைகிவசல்லமவர்களிடத்திலவந்து நபியவர்களை நோக்கி ஆய் முகம்மதே உங்களுடன் சேர்ந்திருக்கிற சகைபு உமறுகப்பாபு சல்மான் வகையறுவான ஜனங்கள் மிகவும் எளியோர்களாகவும் கேவலமுடையவர்களாகவு மிருப்பதால் நாங்கள் தங்களிடம் வரும்போது அவர்களிருக்கப்படாது அவர்களை யுங்கள் சபையைவிட்டு நீக்கவேணும் அவர்கள் ஆட்டு மொச்சை பிச்சமுடையவர்களாயிருக்கிறார்கள் நாங்களெல்லா ஜனங்களுக்குந் தலைமையுடையவர்களாகவும் பெரியதனக்காரராகவு மிருப்பதால் அவர்களுடன் நாங்களிருக்கிறது யெங்களுககுக் கேவலமாயிருக்கிறது எங்களைக் கண்டவுடனவர்களை நீர்போகும்படி சொன்னுல் உங்களுமைக்கொண்டு விசுவசித்து ஈமான்கொள்வோமென்று அந்தக்காபிரீன்கள்சொன்னபோது நபிநாயகம் அவர்கள் அந்தக்காபிரீன்கள் ஈமான்கொள்கிறதை கேசித்து அந்த புக்கருக்கான ஜனங்களை அந்த மஜ்லிசைவிட்டு வெழுப்பலாமவென்று நினைத்தபோது ஜிபுரீல் அலைகிஸ்ஸலாமவர்கள் ஓர் ஆயத்தைக்கொண்டிறங்கினார்கள் அதன்பொருள் ஆய்னே தருமையான நபியே முகம்மதே காலையிலு மாலையிலும் தங்கள் றப்பைநாடி இகுலாசாய் வணங்கின்ற எளியோரான ஜனங்களை நீர் விரட்டவேண்டாமென்ற அவ்வாயத் திறங்கியவுடன் நபியவர்கள் அக்காபிர்களிடத்தில் என்னுடைய ஆண்டவனவர்களை விரட்டவேண்டாமென்று வுத்திரவுசெய்துவிட்டானென்க அவர்களுக்கொருநாளு மெங்களுக்கொருநாளுமாக வக்கிசுகொள்ளுங்களென்க. அதுவும்படாதென்றார்கள் ஒரேசபையாகவிருக்கபோதிலும் உங்கள் முகத்தை யெங்கள்பக்கமும் முதுகை அவர்கள்பக்கமுமாகவாவது மிருக்கக்கூடாதாவென்க வேறொரு ஆயத்திறங்கியது அதன் பொருள் ஆயே என்சங்கையான நபியே காலையிலு மாலையிலுந் தங்கள் றப்பின் பொருத்தத்தையும் உள்ளமையையும் நாடிவணங்கின்ற மனிதர்களுடனே சபூர்செய்தவராயிரும் அவர்களைவிட்டும் துன்யாவின் சீனத்தைநாடினவராய் உம்முடைய பார்வை கடக்கவேண்டாம் நம்முடைய திக்றைவிட்டு மறந்து தன்கவாவைத்துடர்ந்து வம்பனுக்கு நீர்வழிப்படவேண்டாமென்று அல்லாகுத்தஆலா



திருவுளம்பற்றினன் இவ்வாயத்திறங்கினவுடன் நபிநாயகம் அல்லாகுத்தஆலாவைப் புகழ்ந்தார்கள்.

## றிவாயத்து

நபிநாயகம் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களளவில் புக்கருக்கோர் தூதனுப்பினார்கள் அவர்கவந்து அல்லாவின் றசூலே நானுங்களும்மத்துகளின் புக்கருககளுடைய தூதாயிருக்குமென்க மறகபா உமக்கும் அவர்களுக்கும் சபேசாபனஞ் சொல்லுகிறேன் வந்தகாரணமென்னவென்க அல்லாவின் றசூலே புக்கருக்கள் சொல்லுகிறார்கள் சீமான்களெல்லாம் நன்மையானகருமம் அனைத்தையுங் கொண்டுபோகிறார்கள் எங்களுக்கவை கிடைக்கவில்லையே அதென்னவென்றால் அவர்கள் ஹஜ்ஜு செய்கிறார்கள் சதக்காக்கொடுக்கிறார்கள் அடிமைகளை உரிமைவிடுகிறார்கள் பிணியாளரானல் மீதருந்தலைத் தங்கரிப்பாக நல்வழியிலனுப்புகிறார்களென்க நீர்புக்கருக்களுக்கென் சலாம்சொல்லி யுங்களிலொருவன் நன்மைதேடினவனும் மிடிமையின்பேரில் சபூர்செய்வானாகில் சீமான்களுக்கில்லாத மூன்று நற்கருமங்களுண்டு (அதிலொன்றாவது) சுவர்க்கத்திற் சிவந்த மாணிக்கத்தினாலு முயர்ந்த மேவார் மேடையுண்டு மற்ற சுவர்க்கவாதிகள் அதனளவில் துன்யாவிலிருக்கிறவர்கள் நட்சத்திரங்களை யண்ணாந்து பார்ப்பதுபோல் எட்டிப்பார்ப்பார்கள் அதில் நபியேயொழிய அல்லது ஒலியேயொழிய அல்லது ஷுகிதேயொழிய அல்லது எளிமையுடைய பக்கிருன மூமினேயொழியச்செல்லேயலாது (இரண்டாவது) சீமான்களுக்கு அஞ்ஞூறுவருடத்திற்குமுன் ளெளியோர்கள் சுவனபதி சேர்ந்து சேமமுற்றிருப்பார்கள் சுலைமான் அலைகிஸ்ஸலாமவர்கட்கு துன்யாவிற்கிடைத்த ராஜாங்கம் பொருளின் காரணங்கொண்டு மற்ற நபிமார்களுக்கு நாற்பதுவருடத்திற்குப் பின்புதான் சுவர்க்கஞ்சேருவார்கள் (மூன்றாவது) ஒரு பக்கிருனமனிதன் (சுபுகானல்லாகி வல்கம்துலில்லாகி லைலாயிலாக இல்லல்லாகு வல்லாகுஅக்குபர்)என்று கலப்பறுகலாய்ச் சொல்லி சீமானும் அதுபோற்சொல்லி அத்துடனே பதினாயிரம் திருகமும் செலவுசெய்தாலும் இந்த சீமான் அந்த பக்கிறை யெத்

திக்கொள்ளமாட்டான் இதுபோலவே மற்றநன்மையானவிஷயங்களுமென்று நான் சொன்னதாக அவர்களுக்குச் சொல்லுமென்று அனுப்பினபோது அதைக்கேட்ட புக்கருகைகளீ உள்ளங்குளிர்ந்து ஆண்டவனே மிடிமையைப் பொருந்திக்கொண்டோம் பொருந்திக்கொண்டோமென்றுசொன்னார்கள்.

(இன்னும்) பக்கிரென்னு மிடிமையாளனாகிய மனிதனுக்கு ஐந்துசங்கையுண்டு (ஒன்றாவது) தொழுகை சதக்காவகையறுவிற் சேமானுடைய அமலின தவாபைக்கான அவன் அமலுக்கு தவாபு அனேகமுண்டு (இரண்டாவது) பக்கீறு ஒருவஸ்துவை இச்சித்து அதுகிடையாதபட்சத்தில் சபூர்செய்தால் அவனுக்கு நன்மையெழுதப்படும் (மூன்றாவது) சுவர்க்கலோகத்தளவில் ஏளியோர்கள் முன்செல்வார்கள் (நாலாவது) அவர்கட்கு ஆகிறத்தில் கேள்விக்கணக்கு மிகவுங் குறைவு (ஐந்தாவது) அவர்கட்குத் துக்கங் குறைவாயிருக்கும் ஏனென்றால் சீமான்கள் ஆகிறத்திலானபோது நாம் பூலோகத்தில் பக்கிறாகிய ஏளியமனிதராயிருந்தோமில்லையே யென்றெண்ணங்கொள்வார்கள்.

---

## ஷுக்று.

---

யாராகிலு மொருமனிதன் தீனின் விஷயத்தில் தன்னைக்காண மேலானவர்களாகவும் தக்குவாவின்விஷயத்தி லுயர்ந்தவர்களாகவும் இருக்கிறதைக்கண்டு அதைப்போல் நாமும் பேணுதலாய் நடக்கவேணும் தக்குவாவும் இபாதத்தும் செய்யவேணுமென்றெண்ணி அவர்களைக்கொண்டு துயர்ந்து நடந்து துன்யாவிஷயத்திற்பொருளாலுங்காலசம்பத்தாலும் தன்னைக்காணத்தணிந்தவர்களைக்கண்டு நமக்கு அல்லாகுத்தஆலா இவ்வளவாவது தந்தானேயென்று சுக்றுசெய்து ஆண்டவனைப்புகழ்வாராகில் அம்மனிதனை அல்லாகுத்தஆலா பொறுமையாளனென்றும் சுக்றுசெய்தவனென்று மவன் தப்தரில் யெழுதும்படி மலக்குகளுக்குவுத்திரவுசெய்வானென்றும் நபிநாயகம் சல்லல்லாகு அலைகிவசல்லம் திருவுளமானார்கள் (இனி) பணக்காரர் நபுசுக்கு வருத்தத்தையும் கல்பின் பலபாரத்தையும் கியாமத்தின் கேள்விகணக்கின்கடினத்தையும் தெரிந்துகொண்டார்கள்



ஏளியோர்கள் நபுசின் சுகத்தையும் கல்பின் பல நினைவுகளின் நெருக்கிடுக்கிறதையும் கியாமத்தின் கேழ்வி கணக்கின் இல்லையும் தெரிந்துகொண்டார்களென்று சுக்கிக்கு றகிமகுல்லாகு அவர்களைத் தொட்டுமே வந்திருக்கிறது.

———0———

## றியாயத்து.

---

சொர்க்கலோகத்தின் அரசர்களைத்தொட்டு மக்களுக்கு நான் அறிவிக்கட்டுமா வென்று நபிநாயகம் அவர்கள் கேட்க நல்லதென்று சகாபாக்கள் சொன்னபோது சுவர்க்கத்தின் ராஜர்களியாரென்றால் தரித்திரத்துடனிருந்து பெண்முடிக்கயேலாமல் தனதுட்டினைறவேறாமல் நெஞ்சில் அவ்வெண்ணம் வைத்துக்கொண்டிருந்து அதைப்பட்டுக்கி மரணமாகிறார்களே அந்த யேழைகளான மனிதர்களாயிருக்கும் அவர்கள் அல்லாவின் பேரிற் பாரஞ்சுமத்தி லதைமுறிக்கமாட்டார்களென்று நபிநாயகம் திருவுளம்பற்றினார்கள் இச்செய்திகள் தம்பியிலும் துற்றதிலும் வருகின்றது.

---

## ஹிக்காயத்து.

---

ஹஸறத்து இமாம் கஸ்ஸாலி றகிமகுல்லாகு அவர்கள் மவுத்தானபோது அவர்கள் தானைத்தில் சேகுமுகம்மதுதகறிறீ றகிமகுல்லாகு அவர்களை நிறுத்தாட்டப்பட்டது மக்கா வுரியாவில் ஒரு வருடக்குடியிருந்தார்கள் அப்போது நபில் நோன்பை விடாதவர்களாகவும் நித்திரை புரியாதவர்களாகவும் முதுகைச் சுவரிற் சேர்க்காதவர்களாகவும் காலை நீட்டாதவர்களாகவும் இருந்தார்கள் அது பது வயது சென்றபோது குத்துபியத்துடைய மக்காமில் காத்தார்கள்-அவர்களிடத்தில் ஒருநாள் தங்கள் வயசிறப்புநன்மைகளின்னுமெனதயாவது கண்டீர்களாவென்று கேட்கப்பட்டபோது நான் பருகாதின் சாவியாசி லோர்தடவை யுட்கார்ந்திருந்தேன் அப்போது தங்கசி சோலமாய்க் காலின் பிறியடியில வைத்த மூகமஞ்சனிறமான

யொரு வாலிபர்வந்து ஒதுச்செய்து இரண்டு றக்அத்துத் தொழுதுவிட்டுத் தன் தலையைக் கவிழ்ந்தவராய் மௌனியாயிருந்து எங்களுடன் வந்தும் தொழுகையைத் தொழுது பழையபடி தலையைச் சட்டைக் கையிற் கவிழ்த்தினவரா யிருந்தார் அந்நேரம் அவ்வூரின் பாதுஷா ரூபியாக்களை தருவித்து அந்த விருந்தாக்களை முத்தார் தானங்கள் போக காடினநேரத்தில் அப் பக்கீர் வாலிபருடைய விருந்துக்கு யெங்களுடனிரும் வாருமென்றேன் அதற்கு பாதுஷா இடத்தில் எனக்கொரு ஹாசத்தும் தேவையுமில்லை எனக்கு மக பூக்கடைக் கிச்சடிச் சோற்றை சாப்பிடுகிறேனென்றார் நானென் கல்பில் இவர் நம்முடன் வாராமல் இன்னது வேறுவென்று சொல்லுகிறாரே யென யெண்ணி அவரை யப்படியே விட்டு விட்டு அந்த ராத்திரியில் டைய பள்ளிக்குவந்து ஏகாலியா அனமிற்றிருந்தேன் அப்போது அவ்வாலிபரை நித்திரை செய்கிறவரைப்போற் கண்டேனது க்கனங்கிட்டினை அக்கோம் நபிகளல்லாகு அலைகிவசல்லம் அவர்களுடன் அநேக வழிப்பயமான கூட்டங்களையும் கண்டேன் அவர்கள் முகங்கள் ஒளிவுபிரகாசிக்கின்றது.

அப்போது இவர்கள் நெருங்கியவராய் யிருக்கும் வலது பக்கத்தி லிருக்கின்றவர்கள் இபுறாகீம் கலீலுல்லா இடது பக்கத்திலிருக்கின்றவர்கள் மூசா கலீமுல்லா பின்னிருக்கின்ற கூட்டங்கள் லட்சத்திருபத்தி நாலாயிரம் நபிமார்கள் சலவாத்துல்லாகி அலைகிம் அஜ்மயீனுமிருக்குமென்று எனக்கொருவர் சொன்னார் வுடனே நபிநாயகம் சல்லல்லாகு அலைகிவசல்லம் அவர்களின் கையை பெரித்து முத்தமிட்டெதிர்கொண்டு சென்றேன் என்னைவிட்டுத் தங்கள் முகத்தைத் திருப்பினார்கள் அக்கோ சொல்ல மறுபடியும் திருப்பினார்கள் மூன்றுவது திருப்பினபோது யாறசூலல்லா அல்லாவின் சத்தையானே நபியே தங்கள் மேன்மைதங்கிய சிறப்புற்றோங்கிய திருமுகத்தை யென்னை விட்டுத் திருப்புகிறீர்களே யென்னின்ன பேதகுற்ற மேதிட்டதென்று நான் கேட்டதற்கு தாங்கள் எனக்கவிட்டுட்டு நம்முடைய பக்கிரிகளினின்று மொருவர் உம்மிடத்தில் இச்சடிச் சோறு வேண்டுமென்று கேட்டதற்குக் கொடாமல் பகிலத்தனஞ் செய்து அவரை இவ்விரவிற் பசித்திருக்கவிட்டீரேயென்று சொன்னார்கள் அந்நேரம் மனக்கலக்கம் வெட்கமானிக்கத்தைப் போன் றிருக்க வுடனே நித்திரைவிட்டுப் பதறிக் கைகால் நடுங்கினவனாய் வெளியிற் பார்த்தேன் அவ்வாலிபரை அவ்விடத்திற் காணவில்லை



சாலியாவை விட்டும் வெளியே வந்து பார்க்க அப்பொழுது தான் போகக் கண்டு யாப்பர் ஓ வாலிபரே யும்மைச் சிருஷ்டித்த அல்லாகுத்த ஆலாவைக் கொண்டு சத்தியமாய்ச் சற்றே பொறும் நீர் கேட்ட ஒசிபனத்தைக்கொண்டு வருகிறேனென்றேன் அதற்கவரென்னைப் பார்த்துக் குறுநகை சிரிப்பாகச் சிரித்து ஆய் ளசனே உம்மிடத்தில் ஒரு பெரியமனிதன் ஒரு வஸ்துவை இச்சித்துக் கேட்டதற்குக் கொடாமல் ஒருலட்சத்தி யிருபத்திநாலாயிர நபிமார்கள்வந்து சிப்பாரிசு செய்ததின் பிறகா கொடுக்கப்போகிறீர் எனக்கு அதனில தேவையில்லையென்று சொல்லிவிட்டு அப்படியே நடந்தார் இச்செய்தி யிஞ்சாத்தால் அவ்வாறிராம் இருசாதியும்வருகின்றது அல்லாகுத்த ஆலா வலிகளான பெரியோர்களின் பறக்த்தால் நமக்கு வேறுபொறுத்து அவனின் தீதாறை ஆசித்து வணங்கின்ற நல்லோரின் கூட்டத்திற் சேர்த்து நம்மனைவரையும் பாதுகாத்து இரட்சித்து நற்கிருபை அருள் புரிந்து மருமத்துச் செய்வாருக ஆமீன் யாறப்பல் ஆலமீன்.

## எக்கீனென்னு முன்மை மூன்றுவகையா யிருப்பதின் விபரம்.

எக்கீனென்னு முண்மை கொள்ளுதல் மூன்றுவிதம் (முதலாவது இல்முல்யெக்கீன்) அதாவது புத்திமூலமாய் அல்லாகுசுபுஹானகுவத்த ஆலா குத்ரத்தை தன் சிந்தையி லுற்றுணர்ந்து இவ்வுலகங்கள் பேதகமாய் இல்லாத வல்லுண்டாகிறதையும் உண்டானவஸ்து அழிகிறதையும் கண்டு இவ்விதம் செய்கிறதற்கு ஒரு ஆண்டவனுண்டாகி யிருக்கவேண்டிய தவசியம் அவைகள் தன்னைத்தானே பெற்ற வாட்டமாகாதென்று அத்தாட்சி பிடித்தறிக்க உண்மை (இரண்டாவது ஐனுல்யக்கீன்) அதாவது முஷாகிதாவைக் கொண்டு தோன்றிய அறிவு (முஷாகதா) வென்பது உஜூதெனனும் உலகின் அணுக்களில் நின்று மொவ்வொன்றில் ஹக்குத்த ஆலாவின் வஜூப்பத்திற்கு வாய்க்கில்லாத சேர்தல் பிரிதல் பட்டுத்தி

டம் திசை ரூபம் முதலானவைகளை விட்டும் ஹக்கைப் பரிசுத்தமாக்குவதுடன் றப்பைத் தெரிசிக்கிறதாயிருக்கும் (ஷுஹூது) மென்றால் ஹக்கைக்கொண்டு ஹக்கைத் தெரிசிக்கிறதாயிருக்கும் அது பனாவுடைய வேலையிலா யிருப்பதால் தானென்றும் வேறென்றுந் தோன்றாது, தெளிவு பெற்றால் தோற்றும் (ஹாலின்) போகுனால் து சாலிக்குடைய கல்பில் தனக்கொரு தொளிலன்றி றப்பால் தெரிகிற ஒரு மகுறவாயிருக்கும் அது தெமமாகவிட்டால் மக்காமென்று பெயர் (மூன்றாவது ஹக்குல் யக்கீன்) அதாவது இல்முலும் ஷுஹூதாவும் ஹாலைவும் அப்தின் பதிகான சிபத்துக்களைன்னும் அறிவுநாட்டம் உசும்பல் ஒடுக்குதல்முதலான வர்ணிப்புகள் இயல்புகளெல்லாம் ஹக்கின் பூர்ணநிலையடான பிரப்பமான மட்டுதிட்டமில்லாத அழிவற்ற சிபத்துகளென்னும் ஹயாத்து அறிவுநாட்டம் தத்துவமுதலான வர்ணிப்புக்களில் இவன் பனாவாய் அழிந்து மாய்த்ததில்நின்றும் உண்டாகியவுண்மை அவ்விதமன்றி கற்றுபிந்த அறிவால் மாத்திரமுண்டானதல்ல (இனி) அப்தில் நின்றும் பனாவாகிறது நிச்சயமாய் இவன் வர்ணிப்புகளே தவிர உண்மை பனாவாகிறதல்ல அந்நேரம் பனாவான அப்தின் இலொன்று முன்னமை பக்காவாயிருக்கிறது.

வேண்டுமாகு மாதலின் பொய்யான ஜாதிகள் இயல்புகளெல்லாம் ஹக்கின் பூர்ண நிலையடான பிரப்பமான மட்டுத்திட்டமில்லாத அழிவற்ற சிபத்துகளென்னும், ஹயாத்து அறிவுநாட்டம் தத்துவமுதலான வர்ணிப்புக்களில் இவன் பனாவாய் அழிந்து மாய்த்ததில் நின்றும் உண்டாகிய வுண்மை அவ்விதமன்றி கற்றுபிந்த அறிவால்மாத்திர முண்டானதல்ல இனி அப்தில் நின்றும் பனாவாகிறது நிச்சயமாய் இவன் வர்ணிப்புகளே தவிர உண்மை பனாவாகிறதல்ல அந்நேரம் பனாவான அப்தின் இலொன்று முன்னமை பக்காவாயிருக்கிறது வேண்டுமாகுமாதலின் பொய்யான ஜாதிகள் விளங்கிக்கொள்கிறதுபோல் அப்தின் ஜாத்து ஹக்கின் ஜாத்தில் பனாவாகாது (யென்கிறும்) அப்து அடிமைத்தனத்தைக்கொண்டும் ஏழ்மைத்தனத்தைக்கொண்டும் பனாவைக்கொண்டும், றப்பாலில் முடிதலாகுந்தோறெல்லா மவனுக்குப் பழிப்பான படைப்பனைப்பட்ட சிபத்துகளுக்குப் பகரமாக றப்பின் புகழான மெயான சிபத்துகளில்நின்றும் ஜாதிகளெனாமாய் உயர்வாய் நிலைத்தகொடுப்பான் அதனுலந்த அடிமை ஆலத்தில் தன்மேனுமானத்த



